அனைவருக்கும் மனித உரிமைகள் :
சமாதான முறைவழியில் சிறுபான்மையினரின் உரிமைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறுபான்மையினரின்
உரிமைகள் பற்றிய செயற்றிட்டம்

# இனத்துவம்

கலாநிதி தேவநேசன் நேசையா

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை.

அனுசரணை : ஐரோப்பிய ஒன்றியம்

ISBN : 955 - 582 - 116 - X

உள்ளே :

- இனத்துவம்

*– கலாநிதி தேவநேசன் நேசையா*

# இனத்துவம்

## பொழிப்பு

இந்த ஆய்வு இலங்கையின் வரலாற்றைப் பற்றியதோர் ஆழமான மீளாய்வில் ஈடுபடுவதுடன் தனது பணியில் இறங்குகிறது. அந்த முயற்சியில் இலங்கையினுள் குடிபுகுந்த பல்வேறு இனத்தவர்களையும் ஐரோப்பிய குடியேற்றவாதிகளையும் இனங்காணுவதிலும், நாட்டில் தற்பொழுதுள்ள நான்கு முக்கிய மதங்களின் தோற்றத்திலும், அவை மக்களிடையே செல்வாக்குப் பெறுவதில் இவர்கள் ஆற்றிய பங்கை அறியும் முயற்சியிலும் ஈடுபடுகிறது. இதனைத் தொடர்ந்து சட்டப்படி சம உரிமை உடையவர்களாக இருந்தும் நாடு கடத்தலுக்கும் ஓரங்காட்டுகைக்கும் ஆளாகியுள்ள இந்தியத் தமிழர்களின் பரிதாபத்தை ஆராய்ச்சி செய்வதிலும் முனைகின்றது. ஏற்கனவே, நாட்டில் வாழ்ந்துவரும் சிறுபான்மைக் குழுவொன்றின் பலத்தைக் குறைப்பதற்கென உருவாக்கப்பட்ட அரசியற் பணிகள் மற்றும் கொள்கைகளூடாக இந்த ஓரங்காட்டுகை(க்கான காரணி) ஆராயப்படுகிறது.

இங்கு ஆராயப்பட்டுள்ள அடுத்த முக்கிய விடயம் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் முதலாயின அமைப்புகள் தங்களது ஆரம்ப காலத்தில் சிங்கள மொழிக் கொள்கைக்குக் காட்டிய ஆதரவுடன் தொடர்புடையதாகும். சமஷ்டிக்கு ஆதரவான கருத்தும், 70 80 களில் தோற்றமெடுத்த பிரிவினைக்கு ஆதரவான போக்கும் இங்கு ஆராயப்படுகின்றது. சுயநிர்ணய உரிமையெனும் பிரதான விடயம் தமிழ்த் தேசியத்தின் முக்கிய விடயமாக, தேசிய மற்றும் சர்வதேச வரைவிலக்கணங்கள் மூலம் விளக்கிக் கூறப்பட்டுள்ளதுடன் இனவிவகாரங்கள் தொடர்பிலான பிற நாடுகள் பலவற்றினது தற்போதைய அரசியல்யாப்புகளுடனும் ஒப்பீடு செய்யப்பட்டும் உள்ளது.

கட்டுரை சிறுபான்மையினரின் உரிமைகளையும், சமாதான முறைவழிகளையும் மையக் கருத்தாகக் கொண்டு ஆய்வில் ஈடுபட்டுள்ளது. பிரதான விவகாரங்கள் பின்வரும் நான்கு வகைகளுக்குள் அடங்குகின்றன. உடல் ரீதியான பாதுகாப்பின்மை, அவமதிப்பு மொழிரீதியிலான ஓரங்காட்டுகை, இனஞ்சார் ஓரங்பாட்டுகை, பல்லினத்தன்மை, மற்றும் வலய விவகாரங்கள் முதலாயினவே இந்நான்கும். இவற்றுள் உடல்ரீதியான பாதுகாப்பின்மையும் அவமதிப்பும் இனரீதியான வன்முறைகளின் விளைவாகவும் இனச்சுத்திகரிப்பு போன்ற நடபடிகள் காரணமாகவும் எழுகின்றனவென்பதை ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

மொழிசார் ஓரங்கட்டுகை கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தீர்க்கப்படாமலிருக்கும் பாரிய பிரச்சினையாகும். தேசிய மொழிகளுள் ஒன்றாக தமிழ் ஏற்கப்பட்டிருந்தும், தமது அரச அலுவலகங்கள் பல ஒரு மொழியிற் தான் தமது கடமைகளை நிறைவேற்றுகின்றன. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான அமுலாக்கச் செயற்பாடுகள் இன்றும் இல்லாதிருப்பது, சிறுபான்மையினர் வாழும் பிரதேசமொன்றில் ஆதிக்க நிலையிலுள்ள மொழிமீது சிறுபான்மையினருக்கு எதிர்ப்பு உருவாகக் காரணமாயுள்ளது.

இன அடிப்படையிலேயே பெரும்பாலான வாழ்விடங்கள் அமைந்துள்ளமையால் பல்லினத்தன்மையும் வலய விவகாரங்களுடன் தொடர்புடையனவாயுள்ளன. 1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்தைத் தொடர்ந்து இனச் சுத்திகரிப்பு ஒரு முக்கிய விவகாரமாகிவிட்டதன் விளைவாக மக்கள் தங்களது வாழ்விடங்களை மாற்றிக் கொள்வது கிழக்கு மாகாணத்தில் குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வேறுபாடு இலங்கையில் அவ்வளவாக இல்லையென்றாலும் சாதி வேறுபாடு மேலோங்கியிருப்பதைத் தெளிவாகக் காணலாம். பல்லினத்தன்மை காரணமான பாதிப்பை கல்வி, தொழில்வாய்ப்பு, குடியிருப்பு வசதி போன்ற சகல துறைகளிலும் காணமுடிகின்றது. அரச கட்டுப்பாட்டு பகுதியென்றும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென்றும் நாட்டை வேறுபடுத்திக் காட்டுகின்றமையானது மக்களை மேலும் அந்நியப்படுத்துவதுடன் அவர்களை உடல்நலம், பாடசாலை, பொது வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற வாழ்க்கைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

இம்மாதிரியான அந்நியப்படுத்துகை தமது சொந்த வாழ்விடங்களுக்கு திரும்ப ஆர்வமுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவதான மிகச் சிக்கலான பிரச்சனைக்கு வழிகோலியுள்ளது.

முழுமையான சுதந்திரம், ஜனநாயக மற்றும் மனிதவுரிமைகள் முதலியனவும் மீண்டும் இலங்கை மக்களின் மனங்களில் போதிக்கப்பட வேண்டியவையாகிவிட்டன. போதிய அறிவூட்டலின்றி சமாதான முறைவழிகளில் முன்னேற்றம் காண்பதென்பது சிக்கல் மிக்கதாகவிருக்கும். பதற்றநிலை, இனரீதியான கிளர்ச்சி முதலியனவற்றின் வேகமும் குறையத் தொடங்க, இலங்கைத் தீவில் முன்னர் கோலோச்சிய ஸ்திரமான நிலையும் சமாதானமும் மீண்டும் உருவாகக்கூடியதோர் மாற்றத்தை உருவாக்குதல் அவசியம்.

# இனத்துவம்

முன்னுரை

இச்சிறிய தீவான இலங்கை பல்லின மக்கள் வாழும் ஒரு நாடாகவிருப்பது மிகவும் வியப்பிற்குரிய விடயமாகும். இனப்பல்வகைமையை, மோதலுக்கான இயல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகவோ அல்லது நற்பயன் பலவற்றினை அள்ளித்தரவல்ல பெறுமதிமிக்க சொத்தாகவோ கொள்ளலாம்.

இரண்டு மில்லேனிய ஆண்டுகளுக்கு மேலான காலத்திலிருந்து இரு மிகப்பெரிய மதங்களையும், இரு மிகப்பெரிய மொழிகளையும் பேணிக்காக்கும் நற்பேற்றினை நாம் பெற்றிருந்தோம். பல நூற்றாண்டுகளுக்கு முன் உலகின் இரு வேறு மதங்களையும் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து அனைத்துலக மொழியொன்றையும் நாம் பெற்றுள்ளோம். இவை யாவற்றுடன் மேலும் பல சமயங்களும் மொழிகளும் எனது கலாசார பொக்கிசங்களுடன் சங்கமமாயுள்ளன. மறுபுறம், அவற்றுள் பல பல்லாண்டுகாலமாக சுதேசிய இலக்கியத்திற்கு மிகமுக்கிய பங்களிப்பு வழங்கியுமுள்ளன.

வரலாற்றுப் பின்னணி

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கையில் மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன. வேடர்கள் தம்மை மரபுவழிக்குடிகள் எனக் கோருகின்றனர். ஆயினும், இந்திய மக்கள் சமூகங்கள் பல இலங்கைக்கு அண்மையில் வாழ்ந்ததும், அவர்கள் கடற்பயணிகளாக வாழ்ந்து வந்ததும் இந்தியக் குடிவரவாளர்களின் பல தொகுதிகள், தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ கிறிஸ்துவிற்கு முந்திய முதலாம் மில்லேனியத்தின் ஆரம்ப நூற்றாண்டு காலப்பகுதியிலேயே இங்கு குடியேறியுள்ளதுடன் ஏற்கனவே வாழ்ந்து வந்த குடிமக்கள் தொகையின் அதிகரிப்பிற்குக் காரணமாகவும் இருந்துள்ளனர். பௌத்த மதத்தின் வருகைக்கு முன்னர் இத்தீவின் குடிமக்கள் இந்துக்களாகவோ அல்லது ஆவியுலக கோட்பாட்டாளர்களாகவோ வாழ்ந்துள்ளனர். கி.பி. முதலாவது மில்லேனியத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில், பௌத்த மதம் இந்தியத் தமிழர்கள் மத்தியிலும் இலங்கையின் வடக்கு கிழக்கிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. பின்னர் இந்து மதத்தின் செல்வாக்கினால் மறைந்து போயிற்று. ஆனால் இலங்கையின் தெற்கிலும், மேற்கிலும், மத்தியிலும் அதன் செல்வாக்குக் குன்றவில்லை. அக்காலகட்டத்தில் நாட்டிற்குள் குடிபுகுவதும் வெளியேறுவதும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. குடியேறிய புதியவர்கள் அவ்வவ் இடங்களின் மொழியையும், மதத்தையும் தழுவிக் கொண்டனர்.

கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டிலிருந்தான இலங்கையின் வரலாறு பற்றிய பழைய சான்றுகள் ஏட்டில் உண்டு. ஆனால் இலங்கையின் வரலாற்றிற்கு ஊட்டமளித்த இரு பிரதம பாரம்பரியங்களும் அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்து வந்துள்ளதுடன் இந்தியாவையே தங்களது அடியாகக்

கொண்டிருக்கவேண்டும். உலகின் கிழக்குப்பாதி தனது ஆன்மீகக்கருத்துக்களை இன்றும் பெற்றுவரும் மிகப்பெரும் கலாசாரச் சுனையிலிருந்தே இலங்கைத் தீவினரும் தமது உள்ளார்ந்த கொள்கைகளைப் பெற்று வந்துள்ளனர். பாரம்பரியமாக இருந்து வந்துள்ள இந்த இரு கலாச்சாரங்களிலும் ஒன்று இந்திய ஆன்மீகத் தலைவரும் உலகின் மிகப் பெரும் புதல்வருமான சித்தார்த்தர் கௌதம புத்தரின் போதனைகளைத் தனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. மற்றப் பாரம்பரியம் இதற்கும் முற்பட்ட காலத்தையதும் தென்னிந்திய அறிவாலயங்களிருந்து வளர்ச்சிபெற்றதுமான இந்து கலாசாரமாகும். இந்த இரு பாரம்பரியங்களும் இலங்கையில் தனித்தனியே சிறப்புப் பெற்றுள்ளன. தோன்றிய நாட்டிலிருந்தே மறைந்துவிட்டவேளை, தத்துவரீதியிலும் மதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதன் அடிப்படையிலும் பௌத்த பாரம்பரியம் இலங்கையில் முழுநிறைவுடன் பேணப்பட்டு வருகிறதென்றே கொள்ளவேண்டும். இதன் காரணமாக பௌத்த மதம் பின்பற்றப்படும் அனைத்து நாடுகளுள்ளும் நடுவழி பௌத்தம் பின்பற்றப்பட்டு வரும் ஆன்மீகத் தாயகமாக இலங்கை கருதப்படலாயிற்று. (கே.நேசையர் தாய் மொழியிற் கல்வி, பக்கம் 1. ஓலைச் சுவடிகள், கொழும்பு, 1945).)

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரே வரலாற்றின் மத்திய பகுதியில் பல்வகை முஸ்லிம்களின் வருகையுடன், பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பாங்கொன்று உருவானது. தொடர்ந்து நாட்டுக்குள் குடிவந்தவர்கள் தமிழ் பேசுபவராக இருந்தார்கள் அல்லது தமிழ் பேசுபவர்கள் ஆனார்கள். அதே வேளை, சமூக அடிப்படையில் சிங்களவர்களிடமிருந்தும், தமிழர்களிடமிருந்தும் வேறுபட்ட, அவர்களை இனரீதியாக பிரித்துக்காட்ட இஸ்லாம் உதவியது.

இவ்வாறு குடிபெயர்ந்தவர்களிடையே அராபியர், பாரசீகர், எகிப்தியர், அபிசீனியர், மற்றும் இந்தியர் முதலானோர் இருந்ததுடன் அவர்கள் மாலுமிகளாகவும், வர்த்தகர்களாகவும், இஸ்லாமிய மதத்தலைவர்களாகவும், பக்கிரிகளாகவும், பிரயாணிகளாகவும், மருத்துவர்களாகவும் இருந்தனர். இவர்கள் நாட்டைப் பிடிக்கவோ, பிறமதத்தினரைத் தமது மதத்திற்குள் இணைக்கவோ இங்கு வரவில்லை. ஆனால் இலங்கையில் தாராளமாகக் கிடைக்கப்பெற்ற வாசனைத் திரவியங்கள், முத்துக்கள், இரத்தினக்கற்கள், ஆகியவற்றினால் கவரப்பட்டு வந்திருந்தனர். சிவனொளிபாதமலைச் சிகரத்திலுள்ள புனித பாதச் சுவடுகள் இவர்களை அதிகம் கவர்ந்தன, ஆரம்பத்தில் வந்தவர்கள் பல இனங்களையும் சேர்ந்த குழுக்களாயிருந்தனராயினும், அவர்களின் வருகையின் நோக்கம் ஒன்றாகவேயிருந்ததாயினும், அவர்களின் மத நம்பிக்கைகளும் ஆன்மீகச் செயற்பாடுகளும் அவர்கள் இஸ்லாமிய மதத்தின் சுன்னி மதப்பிரிவைச் சேர்ந்தவர்களென்பதைக் குறித்தன. இவ் அடிப்படைகளில் அவர்கள் யாவரும் முஸ்லிம்களாகவேயிருந்தனர். (அமீர் அலி, புளூரல் ஐடென்ரிரீஸ் அன்ட் பொலிரிக்கல் சொய்ஸஸ் ஒவ் த முஸ்லிம் கொம்யுனிற்றி, பக்கம் 122 , மார்கா மொனோகிராப் சீரிஸ் - 2001)

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தையும், சுதந்திரத்திற்குப் பிந்திய முற்பகுதியையும், நன்கு ஆராய்வோமாயின், சிங்கள, தமிழர்களது இன அடையாளங்கள் கட்டுறுதியற்றனவாகவும் எவரும் எளிதில் நுழையவோ வெளியேறவோ கூடியனவாகவுமிருந்ததைக் காணலாம். நடைமுறையிலிருந்து இனத்துவம், தேசிய இனம் தொடர்பான இன்றைய ஐரோப்பிய எண்ணக்கருக்கள், சிங்கள, தமிழ், முஸ்லிம் இன அடையாளங்களை வரையறைப்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் கவனஞ்செலுத்தியதுடன் தீவின் இனங்களுக்கிடையே சமூக உறவு பேணலுக்குத் தடங்கல் உண்டு பண்ணுவதாகவும் அமைந்தது. பாடசாலை அனுமதிக்காக மதம்பற்றிய விபரம் சேகரித்தல், தாய்மொழியைப் பிரகடனஞ் செய்யுமாறு கேட்டல், இனம் மதம் என்பனவற்றைப் பிறப்புப் பதிவின்போதும், குடிசன மதிப்பின்போதும் பிரகடனம் செய்யும்படி கேட்டல் ஆகிய அரச நிறுவனங்களின் நவீனமயக் கோரிக்கைகளும் இதனையே செய்தன.

ஐரோப்பிய குடியேற்றவாதிகளின் வருகை பெருமளவு போர்த்துக்கீசர், கணிசமானளவு ஒல்லாந்தர், சிறிய தொகை பிரிட்டிஷ்காரர் முதலானோர் குடியேறக் காரணமாகியது. இவர்களுட் பெருமளவானோர் சிங்கள மக்களுடனும், ஏனைய இனங்களுடனும் இரண்டறக் கலந்துவிட்டதுடன் ஒரு சிறு தொகை பறங்கியரைத் தவிர ஏனையவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியும் விட்டனர். பெரும் எண்ணிக்கையிலான சிங்களவரும் தமிழரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர் (றோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களே அதிகம்). இஸ்லாத்திற்கு மதம்மாறியவர்களைப் போலல்லாது இவர்கள் தமது இன அடையாளத்தைப் பேணிக்கொண்டனர். இருந்தும் காலப்போக்கில் கணிசமானோர் பௌத்தத்திற்கும் இந்து சமயத்திற்கும் திரும்பினர். எனினும் பெரும் எண்ணிக்கையினர் தொடர்ந்தும் கிறீஸ்தவர்களாகவே உள்ளனர்.

காலனித்துவ ஆட்சி காலத்தின் நான்கு நூற்றாண்டு காலப்பகுதிக்கும் மேலாக மக்கள் இந்தியாவில் இருந்து குடிவந்துகொண்டிருந்தனர். சிறு தொகை இந்தோனேசியர்களும் குடிவந்தனர். இந்தோனேசியாவில் இருந்து குடி வந்தவர் மலாய் இன முஸ்லிம்கள். இந்தியாவில் இருந்து குடி வந்தவர்களுள் பெரும்பாலானவர்கள் இந்தியத் தமிழர்கள். இவர்கள் இப்பொழுது மலையகத் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

> இவர்களைப் பெயர் குறிப்பதற்கென ஏற்றுக் கொள்ளப்பட்ட சொல் ஏதும் இல்லை என்ற காரணத்தால் மலையகத் தமிழர் என அழைக்கப்படும் இவர்கள் இலங்கை அரசியலின், கலாசார சமூக நீரோட்டத்தினுள் இணைக்கப்பட்டுள்ளனர். 160 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பெனக் குறிப்பிடும் அளவிற்கு அதன் பிரிக்க முடியாத ஒரு பகுதியான மலையகத் தமிழர்கள், கடந்த 20-30 ஆண்டுகால பகுதியிற் தான் இலங்கையின் அரசியற்

சமூகத்திலான் படிப்படியாக இடம் பெறத் தொடங்கி உள்ளனர். (டானியல் பாஸ், லான்ட்ஸ்கேப்ஸ் ஒஃப் மலையகத் தமிழ் ஐடென்ரிரி - பக்கம் 6 & 7 மார்கா தனிச்சிற்றாய்வுத் தொடர், கொழும்பு - 2001)

சிங்களவர்களைப் போலன்றி இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் இந்தியத் தமிழர்கள் இன ரீதியாக ஓரங்கட்டப்பட்டமைக்கான நீண்ட வரலாற்றினை கொண்டவர்கள். 1948 ஆம் ஆண்டின் பிரசாவுரிமைச் சட்டம் 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானிய வதிவோர் (பிரசாவுரிமை) சட்டம் ஆகிய வற்றினால் மலையகத் தமிழர்களுக்கு பிரசாவுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டு இறுதியாக நிரந்தர வதிவிட உரிமையும் மறுக்கப்பட்டது. ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்ட சட்டவாக்கங்கள், இந்திய இலங்கை ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் முதலானவற்றை தொடர்ந்து மலையகத் தமிழர்களுள் அரைவாசிக்கும் சற்று அதிகமானவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதுடன் மீதியாயிருந்தவர்களுக்கு இலங்கை பிரசாவுரிமையும் கட்டங்கட்டமாக வழங்கப்பட்டது. சட்ட உரிமைப்படி நாடற்றவர் என்னும் தொகுதியினர் இப்பொழுது இல்லாமற் போயினராயினும், உண்மையில் இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டவர்கள் இலங்கையர் சமூகத்தினுள் உள்வாங்கப்படும் நடவடிக்கைகள் இன்னமும் பூரணமாகவில்லை. சுதந்திரம் பெற்ற காலத்தில் இந்தியத் தமிழ் மக்களின் எண்ணிக்கை இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையை விடச் சிறிதளவு அதிகமாகும். இப்போதிருக்கும் இந்தியத் தமிழர் முன்பிருந்தவர்களிலும் பாதியிலும் குறைவு. இலங்கைத் தமிழ் குடிமக்களில் மூன்றில் ஒரு பங்கிலும் குறைவானவர்.

90 சதவீதமானவர்கள் இந்தியாவுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அல்லது இலங்கைப் பிரசாவுரிமை பெற்றவர்களாகிட்டனர். ஆனால் இவர்களுள் ஒரு பகுதியினர் இன்னமும் நாடற்றவர்களாகவுள்ளனர். ஒருவகையினர் இந்தியாவுக்குக் குடிபெயர்வதற்கு விரும்பாதவர்கள். அடுத்த சிறு தொகையினரின் பிரசாவுரிமை பற்றி இதுவரையிலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதாவது, அவர்கள் இப்போதும் நாடற்றவர்களாயுள்ளனர். ஆயினும், முன்னுரிமைக்குரிய மிகப்பெரும் பிரச்சினையாக இது உள்ளது. அதாவது ஏற்கனவே பிரசாவுரிமை பெற்றவர்களுட்பட (900,000பேர்கள்) மலையகத் தமிழர் அனைவரும் பிரதான பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் நீரோட்டத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

## குடிமக்கள் தொகையும் புவியியல் பரம்பலும்

குடிசன மதிப்பீடு 1981இல் இறுதியாக நடைபெற்றிருந்தது. அதன் பிரகாரம் மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டம், ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் சிங்கள மக்களின் தொகை 74 சதவீதமாகும். மத்திய மாகாணத்தில் சிங்களவர்கள் 64 சதவீதமாகவும், ஊவா மாகாணத்தில் 73 சதவீதமாகவும் இருந்தது. 2001 ஆம்

ஆண்டில் இவ்விரு மாகாணங்களின் சிங்களவர்களின் வீதம் 65.3 சதவீதமாகவும், 79.6 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

1981இல் கொழும்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் 10 சதவீதமாகவும், நுவரெலியாவில் 12.7 சதவீதமாகவும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் மாவட்டங்களில் 7 சதவீதத்திலும் குறைவாகவும் இருந்தனர். வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையினராகவும் இருந்தனர். வட மாகாணத்தில் தமிழர்கள் 86 சதவீதமாகவும், முஸ்லீம்கள் 5 சதவீதமாகவும், சிங்களவர் 3 சவீதமாகவுமிருந்தனர். திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களே மிகப் பெரும் இனமாக இருந்தனர். அங்கு கணிசமானளவு முஸ்லீம்களும், சிங்களவர்களும் இருந்தனர். அம்பாறை மாவட்டத்தில் முதலாவது பெரும்பான்மையாக முஸ்லீம்களும், இரண்டாவது பெரும்பான்மையாக தமிழர்களும் இருந்தனர். சிங்களவர்களும் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். கிழக்கு மாகாணம் முழுவதிலும் தமிழர்கள் 41 சதவீதமாகவும், முஸ்லீம்கள் 37 சதவீதமாகவும், சிங்களவர் 25 சதவீதமாகவும் இருந்தனர். முஸ்லீம்கள் அதிக அளவில் வாழ்ந்தது அம்பாறை (41.6) மாவட்டத்திலாகும். தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக தமிழர்கள் 65 சதவீதமாகவும், முஸ்லீம்கள் 18 சத வீதமாகவும், சிங்களவர்கள் 13 சதவீதமாகவும் இருந்தனர்.

சுதந்திரத்திற்கு முன்னைய காலத்தில், கண்டிச் சிங்களவர்களுக்கும், கரையோரச் சிங்களவருக்கும் இடையேயான வேறுபாடு நீண்ட காலமாக இருந்ததுடன் அது அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார கூட்டுகளிலும் பிரதிபலித்ததாயினும், பின்னர் படிப்படியாக மறைந்துவிட்டது. இதற்கு மாறாக, சுதந்திரத்திற்குச் சற்று முன்னரும், சுதந்திரத்திற்குப் பின்னைய ஆரம்ப ஆண்டுகளிலும் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லீம்கள் ஆகிய மூன்று சிறுபான்மையினர் மத்தியிலும் அரசியல் கூட்டு ஒன்றினை உருவாக்கும் முயற்சிகள் தோல்வி கண்டிருந்தன. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் செறிந்திருந்த இலங்கைத் தமிழர்கள் ஏனைய சிறுபான்மையினங்கள்மீது ஆதிக்கம் பெற்றுவிடலாம் என்ற அச்சமே இதற்கான காரணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மூன்றுவகை தமிழ்பேசும் சிறுபான்மையினரும் அரசியல்ரீதியான தனித்துவத்துடனிருக்கையில், முஸ்லீம்களும் மலேசியர்களும் இணைந்து ஒரு புதிய வகையினராகத் தோற்றம் பெற்றனர்.

இந்தியத் தமிழர்களை நாடற்றவர்களாக்கிய சட்டமூலத்திற்குப் பெரும்பாலான இலங்கைத் தமிழ் மற்றும் முஸ்லீம் எம்.பீக்கள் ஆதரவாக வாக்களித்தனர். அவ்வாறு செய்ததன் மூலம் அரசியற் சமநிலையைப் பெரும்பான்மை ஆதிக்கத்திற்கு சார்பாக்கி 50களின் இனக்கலவரங்களுக்கும் வழிவகுத்தனர். சுதந்திரத்தின் பின் நாடற்றவர்களாக அந்தஸ்து குறைக்கப்பட்ட இந்தியத் தமிழர்களின் வேதனையைத் தொடர்ந்த சில வருடங்களில்

அதாவது 1956இலும் 1958இலுமாக இனக்கலவரங்கள் இடம்பெற்றன. 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் கொள்கை சகல தமிழ்பேசும் மக்களையும், அவர்களின் நிலைமையையும் வாய்ப்புகளையும் பெரிதும் பாதித்தது. கலவரம் தமிழர்களின் உயிர், உடைமை, பாதுகாப்பு என்பனவற்றிற்குப் பாதிப்பு உண்டு பண்ணின. இச்சம்பவங்கள் அரசியலிலும் சமூகத்திலும் மாற்றங்களுக்கும், இனமோதல்கள் மோசமடைவதற்கும் காரணமாகின.

இந்தியத் தமிழர்கள் நுவரெலியா மாவட்டத்தில் 42.7 சதவீதத்தினராகவும். பதுளை மாவட்டத்தில் 20.2 சதவீதமாகவும் ஏனைய மாவட்டங்களில் 20 சதவீதத்திலும் குறைந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நடாத்தப்படாத 2001 ஆம் ஆண்டின் குடிசனமதிப்பீல் இந்த வீதம் 21.3 ஆகவும் 18.2 ஆகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக மக்கள் இந்தியாவுக்கு குடிபெயர்ந்தமை, வடக்கு கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தமை, இலங்கைத்தமிழர் என்று வகைப்படுத்தப்பட்டமை முதலாயினவற்றைக் கொள்ளலாம். இந்தியத் தமிழர்கள் இலங்கையர் சமூகத்திலுள் இரண்டறக் கலப்பதாயின் இலங்கைத் தமிழருடன் கலப்பதுடன், ஆரம்பிப்பதாக இருக்கவேண்டும். ஆனால் மெதுவானதும் கஷ்டமானதுமான பணியாக இது இருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

சமயம் என்று பார்க்கப்போனால் நான்கு பிரதான பிரிவுகள் உள்ளன. 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி, சிங்கள பௌத்தர்கள் 69.3 சதவீதத்தினராவர். இலங்கைத் தமிழர்களையும், இந்தியத் தமிழர்களையுங்கொண்ட இந்துக்கள் 15.5 சதவீதத்தினராவர். முஸ்லீம்களும் மலேயரும் சேர்ந்து 7.5 சதவீதமாகவும், கிறீஸ்தவர்கள் 7.6 சதவீதமாக வும் உள்ளனர். கிறீஸ்தவர்கள் சிங்களவர்களில் 6.2% மாகவும், மொத்தத் தமிழர் தொகையில் 1.3% மாகவும் உள்ளனர். இவர்கள் மேல் மாகாணத்தின் மாவட்டங்களிலும் வடபகுதியின் கரையோரங்களிலும் விகிதாசாரத்தை மிஞ்சிய செறிவாக வாழ்ந்து வருகின்றனர். மன்னாரில் 42.1%, புத்தளத்தில் 37.9%, கம்பஹா 23.4%, முல்லைத்தீவு 15.8%, யாழ்ப்பாணம் 12.6%, கொழும்பு மாவட்டங்களில் 11.6ஆமானோர் கிறீஸ்தவர்களாக உள்ளனர். கிறீஸ்தவர்களில் 90% மானவர்கள் ரோமன் கத்தோலிக்கர்களாவர்.

இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I, 1981, 2001 ஆம் ஆண்டுகளில் மாவட்ட ரீதியிலான ஒவ்வொரு சமயத்தவர்களினது பரம்பல் வீதத்தைக் காட்டுகின்றது. அட்டவணை II 1981,2001 ஆம் ஆண்டுகளின் மாவட்ட ரீதியான இனப்பரம்பல் வீதத்தையும் காட்டுகின்றது.

அதாவது 1956இல் 1958இலாக இனக்கலவரங்கள் இடம்பெற்றன. 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் கொள்கை சகல தமிழ்பேசும் மக்களையும், அவர்களின் நிலைமையையும் வாய்ப்புகளையும் பெரிதும் பாதித்தது. கலவரம் தமிழர்களின் உயிர், உடைமை, பாதுகாப்பு என்பனவற்றிற்குப் பாதிப்பு உண்டு பண்ணின. இச்சம்பவங்கள் அரசியலிலும் சமூகத்திலும் மாற்றங்களுக்கும், இனமோதல்கள் மோசமடைவதற்கும் காரணமாகின.

இந்தியத் தமிழர்கள் நுவரெலிய மாவட்டத்தில் 42.7 சதவீதத்தினராகவும், பதுளை மாவட்டத்தில் 20.2 சதவீதமாகவும் ஏனைய மாவட்டங்களில் 20 சதவீதத்திலும் குறைந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நடாத்தப்படாத 2001 ஆம் ஆண்டின் குடிசனமதிப்பில் இந்த வீதம் 21.3 ஆகவும் 18.2 ஆகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக மக்கள் இந்தியாவுக்கு குடிபெயர்ந்தமை, வடக்கு கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தமை, இலங்கைத்தமிழர் என்று வகைப்படுத்தப்பட்டமை முதலாயினவற்றைக் கொள்ளலாம். இந்தியத் தமிழர்கள் இலங்கையர் சமூகத்தினுள் இரண்டறக் கலப்பதாயின் இலங்கைத் தமிழருடன் கலப்பதுடன், ஆரம்பிப்பதாக இருக்கவேண்டும். ஆனால் மெதுவானதும் கஷ்டமானதுமான பணியாக இது இருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

சமயம் என்று பார்க்கப்போனால் நான்கு பிரதான பிரிவுகள் உள்ளன. 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி, சிங்கள பௌத்தர்கள் 69.3 சதவீதத்தினராவர். இலங்கைத் தமிழர்களையும், இந்தியத் தமிழர்களையுங்கொண்ட இந்துக்கள் 15.5 சதவீதத்தினராவர். முஸ்லீம்களும் மலேயரும் சேர்ந்து 7.5 சதவீதமாகவும், கிறீஸ்தவர்கள் 7.6 சதவீதமாக வும் உள்ளனர். கிறீஸ்தவர்கள் சிங்களவர்களில் 6.2% மாகவும், மொத்தத் தமிழர் தொகையில் 1.3% மாகவும் உள்ளனர். இவர்கள் மேல் மாகாணத்தின் மாவட்டங்களிலும் வடபகுதியின் கரையோரங்களிலும் விகிதாசாரத்தை மிஞ்சிய செறிவாக வாழ்ந்து வருகின்றனர். மன்னாரில் 42.1%, புத்தளத்தில் 37.9%, கம்பஹா 23.4%, முல்லைத்தீவு 15.8%, யாழ்ப்பாணம் 12.6%, கொழும்பு மாவட்டங்களில் 11.6%மானோர் கிறீஸ்தவர்களாக உள்ளனர். கிறீஸ்தவர்களில் 90% மானவர்கள் ரோமன் கத்தோலிக்கர்களாவர்.

இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I, 1981, 2001 ஆம் ஆண்டுகளில் மாவட்ட ரீதியிலான ஒவ்வொரு சமயத்தவர்களினது பரம்பல் வீதத்தைக் காட்டுகின்றது. அட்டவணை II 1981,2001 ஆம் ஆண்டுகளின் மாவட்ட ரீதியான இனப்பரம்பல் வீதத்தையும் காட்டுகின்றது.

அரசியல் மாற்றங்கள்:-

இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதி பூராவும் இலங்கைத் தமிழ் உணர்வுகளுக்கான கேந்திர ஸ்தானம் எனப் பரவலாகக் கருதப்பட்டுவந்த யாழ்ப்பாணம் முழு இலங்கையையும் அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிப்போக்கிலான தேசிய இயக்கம் ஒன்றின் தோற்றத்திற்கு வித்திட்டது. முப்பதுகளின் ஆரம்பத்தில் துளிர்விட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் சாதி முறைக்கெதிராகவும், சமஷ்டி முறைக்கு எதிராகவும், (காரணங்கள் என்னவென வெளிப்படுத்தப்படாமல் - ஒரு வேளை இது தீவிரமாக முன்னெடுக்கப்படாதிருந்திருக்கலாம்). இலங்கைக்கு விரைவாகச் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்றும், டொனமூர் சீர்திருத்தம் தரும் அதிகாரங்கள் போதாது எனக்கூறி நிராகரித்தும் தீர்மானம் எடுத்திருந்தது. இதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் இளைஞர்களாகவும், அனேகமானோர் பாடசாலை ஆசிரியர்களாகவும் அதாவது இருபது வயதை அப்போதுதான் தாண்டியவர்களாகவும் பாடசாலைப் படிப்பு முடிந்த மாணவர்களாகவும் இருந்தனர்.

குடாநாட்டைத் தளமாகக் கொண்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வெளியாருடன் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதுடன் நிறுவன ரீதியாக தொடர்புகளையும் நிறுவிக் கொண்டது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசுடன் இணைந்து செயற்பட்டவர்களுள் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, சீ.ஈ.கொரியா, டபிள்யு.தஹநாயக்க, எம்.டபிள்யு.தஹநாயக்க, கொல்வின் ஆர்.டி.சில்வா, ஜோர்ஜ் ஈ.டி.சில்வா, பிரான்சிஸ் டி.சொய்சா, டீ.பீ.தனபால(நிறுவனர்களுள் ஒருவர்), ஏ.ஈ.குணசிங்க, லெஸ்லி குணவர்த்தன, பிலிப் குணவர்த்தன, ரீ.பீ.ஜாயா, டீ.பீ.ஜயதிலக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன, பீ.டி.எஸ்.குலரத்ன (1925 ஆண்டுக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்), ஈ.டபிள்யு.பெரேரா (1929 ஆம் ஆண்டுக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்), ஜீ.கே.டபிள்யு.பெரேரா, என்.எம்.பெரேரா, செலினா பெரேரா (1941ஆம் ஆண்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்), டீ.எஸ்.சேனநாயக்கா, பெரி சுந்தரம், சுவாமி விபுலானந்தா (1928 ஆண்டுக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர்), ஸெ்.ஏ.விக்கிரமசிங்க முதலானோர் அடங்குவர்.

சுதந்திரம் பெறுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே - கல்வியிலும், ஆட்சியிலும் தேசிய மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனக் கோரும் போராட்டத்தை யாழ்ப்பாண தேசிய காங்கிரஸ் முன்னின்று நடத்தியது. யாழ்ப்பாணத்தின் பல முன்னணி பாடசாலைகளிலும், இரண்டாம் நிலை மாணவர்களுக்கு சிங்களமொழியைக் கட்டாயமாகக் கற்பிப்பதற்கு வழிசெய்வதில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வெற்றிகண்டது. இதுபற்றி ஜே.ஈ.ஜயசூரிய பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "சிங்களவர்கள் சிங்களமொழியைப் புறக்கணித்து விட்டிருந்த காலத்தில் தமிழர்கள் சிங்களத்திற்கும் தமிழுக்குமாகப் போராடினர். (ஜேசையா 1981:152) இறுதியில் நடந்ததென்னவென்றால்

1956ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கும் முயற்சி திடீரெனக் கைவிடப்பட்டது. சிங்களம் மட்டும் அரசகரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசிடமிருந்து அரசியல் தலைமையைக் கைப்பற்றிக்கொண்ட தமிழ் காங்கிரஸ், இளைஞர் காங்கிரசின் மொழிக் கொள்கையைத் தொடரவில்லை. இலங்கைத் தேசிய காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சித்தலைமை போன்று தமிழ் காங்கிரசும் உயர் கல்வி நிறுவனங்களில் போதனைமொழியாகவும், ஆட்சிமொழியாகவும் ஆங்கிலமே தொடர்வதை ஏற்றுக்கொண்டு திருப்தியடைந்தது. தேசியத் தலைமைக்குச் சவாலாக உருவாகிய தீவிர சிங்களத் தலைமை, சிங்களம் மட்டும் கொள்கையைப் பேணுவதாக இருந்தது. தமிழர் தலைமை, ஒருவேளை தனது முன்னைய தேசிய மொழிக்கொள்கையைப் பேணியிருக்குமாயின், அதற்கெதிரான சவாலாக சிங்கள தமிழ் இருமொழிக் கொள்கையைத் தளமாகக்கொண்ட பல்லினக் கூட்டணியொன்று தீவிரமாகச் செயற்பட்டிருக்கக்கூடிய சாத்தியம் இருந்தது. ஐம்பதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பித்த சமூக, கலாசார, அரசியல் மாற்றங்கள் பிரிவினைக்கு வித்திடாது ஐக்கியத்தைத் தூண்டுவனவாகவும் அமைந்திருக்கலாம். தமிழ்மொழியை ஓரங்கட்டியும், அந்நியப்படுத்தியும் சிங்களவர்கள் மட்டும் சிறப்புறாமல் இரு மொழிப்பிரிவுகளும் அங்கு வளமாக்கூடியதொரு நிலையும் உருவாகியிருக்கும்.

சுதந்திரம் பெறும் வரையிலும் தமிழ்த்தலைமையானது இலங்கையில் ஒற்றையாட்சிக்குத் தனது ஏகோபித்த ஆதரவை வழங்கி வேறு எந்த ஒரு மாற்று ஒழுங்கிற்கும் இடமளியா நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது. சமஷ்டி என்னும் எண்ணக்கரு சுதந்திரத்தின் பின்னரே தமிழ் மக்களுக்கு அறிமுகமானது. 1952 பொதுத் தேர்தலின்போது யாழ்ப்பாணத்திலேயே பெரும்பான்மையோரால் நிராகரிக்கப்பட்டிருந்தது. 1956ம் ஆண்டில் சிங்களம் மட்டும் இயக்கத்தின் பின்னரே தமிழ் மக்கள் சமஷ்டியாட்சிக்கான தமது விருப்பை வெளியிட்டிருந்தனர். இந்தத் தேசியவாதம் ஒரு தனியாட்சிக்கான கோரிக்கையைக் கொண்டதாக இருந்தும், 1970களின் நடுப்பகுதிவரை தமிழர்களின் ஏகோபித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்த ஒவ்வொரு வேட்பாளரும் தோல்வியடைந்தனர். 1975 பெப்ரவரியில் காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலின்போது எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

> "ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் சமமாக அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான முயற்சிகள் அத்தனையையும் நாம் கடந்த 25 வருடங்களாக எடுத்து வந்திருக்கிறோம்: மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் சுதந்திரத்தின் மூலம் தமக்குக் கிடைத்த அதிகாரங்களை அடிப்படை உரிமைகள் எமக்குக் கிட்டவிடாது செய்வதற்கும் ஆளப்படும் மக்கள் என்னும் நிலைக்கு

எம்மைத் தாழ்த்துவதற்கும் பயன்படுத்தினவென்பது வெளிப்படையான உண்மையாகும்; தமிழீழத் தேசிய இனம் தனது இறைமையைப் பயன்படுத்தித் தன்னை ஓர் சுதந்திர நாடாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்குக் கிடைத்த மக்களாணையாகவே நான் இந்தத் தேர்தலின் முடிவுகளைக் கருதுகிறேன் என்பதை எனது மக்களுக்கும் நாட்டிற்கும் பகிரங்கமாக அறிவித்துக் கொள்கிறேன்."

இந்த அறிக்கையையும் பிரிவினைக்கு ஆதரவான 1976ன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல்முறை, மற்றும் 1972ன் அரசமைப்புச் சட்டம் ஆகியனவற்றின் விளைவாக உருவான வேதனையளிப்பனவும் அவமானப்படுத்தும் வகையிலானவையுமான எதிர்விளைவுகள் பின்னணியாகக் கொண்டே நோக்கப்படல் வேண்டும். 1971இல் தரப்படுத்தல் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் சிங்கள தலைவர்கள் பலர் அதனைத் தவிர்க்க முடியாத அரசியல் நடவடிக்கையாகக் கருதினர். தமிழ் சமூகத்தினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அதிர்ச்சி ஊட்டுவதும் வேதனைமிக்கதுமான தாக்கத்தை உணரத் தவறியிருந்தனர். அக்கறையற்றவர்களாகவிருந்தனர். மறுபுறம், பல்கலைக்கழக அனுமதியில் இனரீதியான சமநிலையின்மை வளர்ந்து வந்ததனால் சிங்களத் தலைவர்களுக்கு ஏற்பட்ட அரசியல் அழுத்தங்களைத் தமிழ் அரசியற்றலைவர்கள் புரிந்துகொள்ளவுமில்லை. அக்கறைக்கு உரியதாகக் கொள்ளத் தவறியும் விட்டனர். பல்வேறு இனத்தலைவர்களும் கூடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்புடைய தீர்வு ஒன்றினை எட்டியிருக்கலாமாயினும், அத்தகைய கலந்துரையாடல்கள் இலங்கையின் அரசியல் பாரம்பரியத்தில் இடம்பெற்றதேயில்லை. இது போலவே, 1972ஆம் ஆண்டின் அரசியற் சட்டத்தயாரிப்பின்போதும் சிறுபான்மையினங்களின் குறைகளுக்கு துளியும் மதிப்பளிக்காது சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையென்றே சிறுபான்மையினர், அதுவும் குறிப்பாக இலங்கைத் தமிழர் கருதினர்.

புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்கும்போது தமிழ்த்தலைவர்களின் எண்ணங்களைக் கருத்திலெடுக்காமலும், இடமளிக்காமலும் விடுவதன் மூலம் அவர்களையும் அதைத் தொடர்ந்து தமிழ் மக்களையும் ஒதுக்கிவிட முயன்றமையே 1976இன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பிரதம காரணியாகியது. அந்தக் கால கட்டத்தில் கூட அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த அனேகரோ அல்லது அதனைப் பகிரங்கமாக எதிர்க்காது இருந்தவர்களோ, அது ஒடுக்குமுறைக்கெதிரான ஒரு எதிர்ப்பென்றே கருதினர். அது தமிழர்களது உணர்வுகளின் வெளிப்பாடென்பதை உணரத் தவறிவிட்டனர். அத்தீர்மானம் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை அவர்கள் தவறாக எடைபோட்டு விட்டனர். அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய இளைஞர்கள் அதனை முக்கியமானதொரு தீர்மானமாகக் கருதியதுடன், தனிநாட்டிற்கான போராட்டமாக முன்னெடுக்கத் தலைப்பட்டதால் ஒரு தசாப்த காலப்பகுதிக்குள்ளேயே அது ஒரு உள்நாட்டு யுத்தமாகப் பரிணாமம் பெற்றது. மறுபுறம், 1977, 1979,

1981, 1983ஆம் ஆண்டுகளில் தமிழருக்கெதிரான வன்முறைகளை ஏற்பாடுசெய்வதற்குச் சிங்கள தலைமைக்குப் போதிய சந்தர்ப்பத்தையும் அளித்தது.

அன்று ஆளும் கட்சியாக இருந்தவர்களுள் சில பிரிவுகளினால் நேரடியாக முன்னின்று நடாத்தப்பட்ட 1983ஆம் ஆண்டின் இனப்படுகொலையின் பிரிவினைக்கெதிரான பிரகடனத்தை அவமானத்தை உண்டுபண்ணும் ஒன்றாகக் கருதி ஏற்க மறுத்த தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டதுடன் தமிழ் மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாதவர்களாக்கப்பட்டனர். இது தமிழர்களிடையேயான ஜனநாயக நடைமுறைகளில் ஒரு நீடித்த முறிவிற்கு வழிகோலியது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின்மையால் தோற்றுவிக்கப்பட்ட வெற்றிடத்தினை தமிழ் போராளிக் குழுக்கள் புகுந்துகொண்டன.

1990ல் முக்கியமான அம்சமாக கிழக்கு மாகாணத்தில் பலமான தளத்துடன் காலூன்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றத்தையும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவு அற்றுப்போனமையையும் குறிப்பிடலாம். தமிழ் மொழியடிப்படையிலான தேசியத்தின் மீது முன்னைய அரசியல் முன்னெடுப்புகள் தமிழ் பேசும் இனக்குழுக்களை ஒன்றுபடுத்துவதில் தோல்வி கண்ட அதே வேளை வடக்கு கிழக்கு பிராந்தியத்தைச் சார்ந்த தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியற் பிரச்சினைகளைத் தொடர்படுத்தியதன்மூலம் அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வைத் தூண்ட அவை உதவியிருக்கமுடியும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்னும் பெயரில் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சி கிழக்கு மாகாணத்தில் பலமான அரசியல் தளத்துடன் தோற்றம் பெற்றதனை இதன் விளைவான வளர்ச்சி எனலாம். முஸ்லிம்களின் அரசியல் எதிர்பார்ப்புகளின் அடிப்படையிற் பார்த்தால் கிழக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்ட ஒரு முஸ்லிம் கட்சியின் தோற்றம் திரிசங்கு நிலையை உருவாக்கியது. இதுவரை காலமும் கவனத்தில் எடுக்கப்படாத வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளை (இவற்றுள் சில அப்பகுதிகளில் வாழும் தமிழர்களது பிரச்சினைகளை ஒத்தன) ஏனைய பிரதேச முஸ்லிம்களை மோசமாகப் பாதிக்காத வகையில் சிறப்புறக் கையாள்வது எப்படி? வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மற்றும் முஸ்லிம் குடிமக்களின் அபிலாசைகளுக்கிடையே இணக்கம் காண்பதுடன், தொடர்புடையது அடுத்த சங்கடமான பிரச்சினை. சமாதான முறைவழியும் அதன் விளைவான எதிர்பார்ப்புகளும் இவ்விரு இக்கட்டுக்களையும் முன்னிலைப்படுத்தியுள்ளன.

இலங்கைத் தமிழர்களுக்கென ஓர் உறுதியான குரல் மத்திய அரசிலோ,(மத்திய அரசில் ஒரு சிறிய காலப்பகுதிக்கு ஒலித்ததென்றாலும்) மாகாண அரசிலோ ஒன்றுமே ஒலித்ததில்லை. வடக்கு கிழக்கிற்கு வெளியேயும் அரசியலின் சகல மட்டங்களிலேயும் பலமிழந்து ஓரங்கட்டப்பட்டவர்களாகவுள்ளனர். இலங்கைத் தமிழர்கள் செறிவாக

வாழும் கொழும்பு போன்ற பகுதிகளில் தேர்தல்களில் போட்டியிட்ட ஒரு சிலர்கூட மிக அரிதாகவே தெரிவு செய்யப்பட்டனர். சிங்கள மக்களின் ஆதிக்கத்திலுள்ள இரு பெரும் கட்சிகளினால் எடுக்கப்பட்டு வந்த (பாதகமான) அரசியல் நிலைப்பாடுகளுக்குப் பெரும்பாலும் எதிர்ப்புக்காட்டும் வகையிலான நடவடிக்கைகளையே இலங்கைத் தமிழர் எடுத்துவந்துள்ளனர். அவர்களது அக்கறை எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்படுமெனும்வகையிலான தோற்றத்தையளித்த பெரும்பாலான சந்தர்ப்பத்திற் அரசாங்கங்களால் அவர்களுடன் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன. அரசின் சகல மட்டங்களிலும் உள்ள அதிகாரத்தைப் பயனுள்ள வகையில் தாக்க இலங்கைத் தமிழர் தங்களது அதிகார ஆற்றலை விருத்தி செய்யவேண்டியமை அவசியமாகிறது.

இன அடையாளம், சுயநிர்ணயம், மனிதவுரிமைகள் தொடர்பான விவகாரங்கள்

திருவாளர் கொட்பிறி குணதிலக அவர்கள் இதுவரையிலும் பிரசுரமாகாத குறிப்புரையொன்றில் கூறியதைப் போன்று சிங்கள தேசியவாதம் கடந்தகால சம்பவங்களிலிருந்தே தோற்றமெடுத்துள்ளது. தமிழ் தேசியவாதமோ நிகழ்கால சம்பவங்களின் விளைவாகத் தோன்றியுள்ளது. இதனைக்கொண்டு, தமிழ்தேசியவாதம் அண்மையில் தோற்றம் பெற்றதாகக் கொள்ளப்படலாகாது.

இலங்கையின் தமிழ் தேசியவாதம் நிலையில்லாததொன்றாக இருக்கலாம். வரலாற்றை மாற்ற முடியாது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த மனதைவிட்டகலா பயங்கரங்களை மறைத்துவிடமுடியாது. தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்த மாதிரியான தோற்றம்பெற்ற தேசியவாதத்தைப் புறந்தள்ளிவிடமுடியாது. "திம்புக் கோட்பாடுகள்" என 1985 யூலை ஆகஸ்டில் தமிழ்க்குழுக்களால் திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது கூட்டாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையில் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. வெளித்தோற்றத்திற்கு பிரிவினை போல தோற்றினாலும் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்னும் கருத்துக்கள் ஐக்கிய இலங்கைக்குள் (ஒற்றையாட்சியிலல்ல) அடங்கக்கூடியன, திம்புக் கோட்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் இக்கோட்பாட்டிற்கு வெவ்வேறு வியாக்கியானங்கள் வழங்கியுள்ளனர். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இவை பிரிவினையை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. ஆதலினால் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமாக இதனைக் கொள்ளமுடியும்.

கடந்த இந்து தசாப்தங்களாக நடந்தேறிய சம்பவங்களின் பின்னணியில் சுயநிர்ணய உரிமை தமிழ் தேசியத்தின் அத்தியாவசியமான கூறாகத் தோற்றம் பெற்றுள்ளது. சுயநிர்ணய உரிமையையும், விரும்பினால் பிரிந்து செல்வதற்கான உரிமையையும், சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் எதிர்க்கும் பலரும் பெருமளவுக்கு தப்பாகப்

புரிந்துரைத்துள்ளனர். சிரிஜிஸ் யூலியஸ் (1994) அவர்கள் சுயநிர்ணய உரிமைபற்றிக் குறிப்பிட்ட பல அம்சங்களுள் கீழ்க்காண்பவையும் அடங்கும்:

6. குறிப்பிட்ட பிராந்தியத்திற்குட்பட்ட அல்லது பொதுவான இன, மத, மொழி முதலானவற்றினால் இணைக்கப்பட்ட குழுக்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட பிரிவினைக்கும் குறைவான சுயாட்சி உரிமை கூட்டாட்சியினுள் வரும் சுயாட்சிப்பகுதிகள் போல.

7. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் 27வது உறுப்புரையிலும் ஐ.நா. பொதுச்சபையின் தேசிய அல்லது இன, மத, மொழி வழி சிறுபான்மையின மக்களுக்குரிய உரிமைகள் பற்றிய 1992ஆம் ஆண்டின் வெளிப்படுத்தலையிலும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டதற்கமைவான பெரிய அரசியல் அமைப்பிற்குட்பட்ட சிறுபான்மைக் குழுக்களது உரிமைகள்.

அனைத்துலகச் சட்டத்திலுள்ள, விருப்புத் தெரிவுகளுள் ஒன்றாகப் பிரிந்துசெல்வதற்கான உரிமை உள்ளதென்றாலும் அவ்விருப்பைத் தன்னிச்சையாகப் பிரயோகிக்க முடியாது. கனடாவின் ஆலோசனைச் சபையின் ஆளுநரினால் (Governor in Council of Canada) 1998இல் ஆண்டு இப்பிரச்சினை கனேடிய மேல் நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டது:-

......கியூபெக் மாநிலத்தின் தேசிய சபை சட்டமன்றம் அல்லது அரசு முதலானவற்றில் ஏதாவதொன்றிற்கு கியூபெக் மாநிலத்தைக் கனடாவிலிருந்து தன்னிச்சையாகப் பிரித்துவிடும்வகையிலான சுயநிர்ணய உரிமை அனைத்துலகச் சட்டங்களில் உள்ளதா? இதற்கான பதிலாக கனடாவின் மேல் நீதிமன்றம் (1998) தனது அபிப்பிராயத்தைக் கீழ்க் கண்டவாறு தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது:

126. ஒரு இன மக்களின் சுயநிர்ணய உரிமையானது உள்ளக சுய நிர்ணயம் மூலமாகவே சாதாரணமாக நிறைவு செய்யப்படுகிறது என்பதை சர்வதேச சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலங்கள் உறுதிசெய்கின்றன. இதன்மூலம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள நாடொன்றின் கட்டமைப்புக்குள் மக்கள் தமது அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான உரிமை உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. விட்டுவிலகி சுயநிர்ணய உரிமைகோரும் உரிமையானது (இச்சந்தர்ப்பத்தில் தன்னிச்சையாகப் பிரிந்து செல்லும் உரிமையை வலியுறுத்தும் படிவத்தில் உள்ளது) மாற்றுவழியில்லாத வேளைகளில்தான் எழுகின்றதென்றாலும் தெளிந்த விளக்கங்களுடனேயே இம்மாதிரியான சந்தர்ப்பம் எழுகின்றது.

127. சுயநிர்ணயம் தொடர்பான அனைத்துலகச் சட்டக் கோட்பாடு தற்போதுள்ள அரசின் பிரதேச ஒருமைப்பாட்டிற்குக் கௌரவமளிக்கும் வகையிலான அமைப்பொழுங்கிற்கு உட்பட்டதாகவே வகுக்கப்பட்டுள்ளது.

130. தற்போதுள்ள கனடா உள்ளிட்ட அரசுகளின் ஒருமைப்பாட்டின் பேணலுக்கும், குறிப்பிட்ட ஒரு மக்கட்தொகையின் முழுமையான சுயநிர்ணய உரிமையைப் பெறும் உரிமைக்குமிடையே இசைவில்லாத் தன்மையேதும் கிடையாது. முழு மக்கட்தொகையை அல்லது தனது பிரதேசத்திற்குட்பட்ட மக்கட்தொகையைச் சமத்துவத்தின் அடிப்படையிலும், பாகுபாட்டிமின்றியும், உள்ளக நிர்வாகத்தில் சுயநிர்ணய உரிமை கோட்பாடுகளை மதிக்கும் விதத்திலும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசின் பிரதேச ஒருமைப்பாட்டைக் காக்கும் கடமை அனைத்துலகச் சட்டத்திற்கு உள்ளது.

134. ஒரு மக்கட்தொகையின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அர்த்தமுள்ள வகையில் பிரயோகிப்பது தடுக்கப்படுமாயின், சுயநிர்ணய உரிமையானது ஒருதலைப்பட்ச பிரிவினைக்கான உரிமையை உருவாக்கிவிடும் என்று மேலும் பல விமர்சகர்கள் வலியுறுத்தியுள்ளனர். சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்திற்கு அத்தகையதொரு முழுமையான தடை இருக்குமாயின் பிரிவினை கோரும் உரிமைக்கு மேலும் வலுவூட்டுவதாக வியன்னா வெளிப்படுத்தலை அமைகிறது.

கனடாவின் மேல் நீதிமன்றமும், இவ்விடயம் தொடர்பான வேறு பிற பெருமளவு ஆணை விளக்கங்களும் (உ-ம் ஸ்மித், மற்றும் அல்ஸ்ரன் 2000) உள்ளக மற்றும் வெளியக சுயநிர்ணய உரிமைகளுக்கிடையில் உள்ள வேறுபாட்டினை நன்கு விளக்குகின்றன என்பதை எம்மால் அவதானிக்க முடிகிறது. ஒரு தலைப்பட்சமாக பிரிவினைக்கு வழிகோலுவதிலிருந்து உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான (ஓரங்கட்டுகையற்ற நிலையை உள்ளடக்கிய சமஷ்டி போன்ற) வலுவான ஏற்பாடு தன்னிச்சையான பிரிவினைக்கு இட்டுச்செல்லாததுமல்லாது அந்த மாதிரியானதொரு நிலைக்குத் தள்ளக்கூடிய சட்ட உரிமையையும் வலுவிழக்கச் செய்துவிடும்.

அரசியல் நடவடிக்கைகளில் இனத்துவம் நுழைந்த பிரச்சினையாக உள்ள இந்தக் கால கட்டத்திலும் மாறுபட்டதொரு வரலாற்றையும் கலாசாரத்தையும் மூவினக் கலப்பையுங் கொண்ட கிழக்கு மாகாணத்தினைத் தன்னாட்சி உரிமையுடைய பகுதியாக்கியிருந்தால் இலங்கை சகவாழ்வுக்கான மாதிரியொன்றாக விளங்கியிருக்கமுடியும். ஒவ்வொரு இனமும் மற்றைய இனத்துடனோ அல்லது மற்றைய இனங்களுடனுமோ கூட்டாக இணைந்து பிராந்திய ஆட்சியை அமைக்குமாறு தூண்டப்பட்டிருக்கவோ, எதிர்காலத்தின் சுபீட்சத்திற்கு பங்கம் உண்டுபண்ணாத வகையில் இனங்களுக்கிடையே முரண்பாடு ஏதுமின்றிச் செயற்படுவதற்கான ஓர் உந்துதலாக அமைந்திருக்கலாம். இம்மாதிரியானதோர் ஒழுங்கு கிழக்கு மாகாணத்தில் தங்களது தற்போதைய மற்றும் எதிர்கால நலன்களில் அக்கறை கொண்டிருக்கும் தேசிய அரசியற் கட்சிகள், தீவின் சகல பகுதியிலும் இனவாத அரசியலுக்குத் தூபமிடாதிருக்க உதவியுமிருக்கும். மோசமான இச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளும்

தன்னாட்சி அதிகாரங்கொண்ட கிழக்கு மாகாணம் உருவாகுவதற்கான சாத்தியத்தை இல்லாதொழித்துவிட்டதுமல்லாது கூறுபட்டுப்போகும் சாத்தியத்தையும் அதிகமாக்கியுள்ளமை எமது துர்ப்பாக்கியமே.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் சம மொழியுரிமைக்கான சட்டரீதியான உரிமையுடையவர்களாவர். இலங்கைத் தமிழர்களும், இந்தியத் தமிழ் சமூகத்தினரும் கலந்து வாழும் (மலையகத் தமிழர்கள் வடக்கு கிழக்கிலும், கொழும்பிலும் குடியமர்ந்து வாழ்வதால் இந்த நடைமுறை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது) வாய்ப்புகளுமிருப்பதனால் இந்தியத் தமிழர்கள் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளில் சென்று வாழ்வதற்கும் வாய்ப்புகளுண்டு. அத்துடன் அந்தப் பிரதேசத்துக்குரிய அரசு அவர்களது மொழி, மதம், கலாசாரம், உள்ளிட்ட நலன்களைப் பேணுவதற்கு உதவுமெனவும் எதிர்பார்க்கலாம். வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்களும் வடகிழக்கும், அப்பிரதேச அரசும் அவ்வாறான விதிகளின் அடிப்படையிலேயே உருவாக வேண்டுமெனும் எண்ணங் கொண்டவர்களாகவே உள்ளனர்.

எந்தவொரு சமஷ்டி அலகும் எந்தவொரு இனத்திற்கும் பிரத்தியேகமானதல்ல என்பதே கூட்டாட்சி எனும் எண்ணக்கருவின் அடிப்படையாகும். அதாவது, நாட்டின் குடிமக்கள் அனைவரும் சகல சமஷ்டி அலகிற்கும் சம உரித்துடையவர்களாவர். ஒரு பிரதேசத்தின் இனச் சமநிலையை மாற்றக்கூடிய வகையிலான அரச உதவியுடனான குடியேற்றங்களை எதிர்ப்பதற்கான சட்ட உரிமை இருக்குமென்றாலும் ஒரு இனத்திற்கு மட்டும் பிரத்தியேகமான பிரதேசங்களைக் கொண்ட ஒரு சமஷ்டி அலகு இருப்பது சாத்தியமானதல்ல. இந்த உண்மையை இலங்கைத் தமிழர்களால் மட்டுமன்றி, இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் சகல இனங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கடந்த காலத்தில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு இடம்பெற்றுள்ளன. இதனைத் தடுக்கவல்ல வலுவான நடவடிக்கை அவசியம். ஒற்றையாட்சியாயினும், சமஷ்டியாட்சியாயினும் நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமான உரித்துடையதே நாடு.

தமிழர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய பிராந்தியமொன்றின் உருவாக்கம் பிரிவினை தொடர்பான அச்சத்தைச் சிங்களவர் மத்தியில் தோற்றுவிப்பதுடன் குறித்த பிராந்தியத்தில் வாழக்கூடிய சிங்களவரின் பாதுகாப்பு பற்றிய கிலேசத்தையும் உண்டுபண்ணும். ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று, சமஷ்டி பற்றிய எண்ணக்கருவும், இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளில் அது செயற்படும் விதமும், இனத்தகராறுகளை (முற்றாக நீங்கமாட்டாதாயினும்) முடிந்த மட்டும் குறைத்து வைத்திருக்கும் என்பதை உணர்த்துகிறது. பிரிவினை விடயத்திலும் கூட, ஏனைய இடங்களின் அனுபவங்கள் உணர்த்துவதென்னவென்றால்,

அடக்குமுறைகள் அதிகமானதாயும், அதிகாரங்கள் மத்தியில் அதிகம் குவிந்துள்ளதாயுமுள்ள நாடுகளில் (பங்களாதேஷ் தொடர்பில் பாகிஸ்தானைப் போன்று) இதற்கான கோரிக்கை வலுமிக்கதாக இருக்குமென்பதுடன் அதிகாரப்பரவலாக்கத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளும் ஒரு சூழலில் (சுவிற்சர்லாந்து மற்றும் ஐக்கிய ராட்சியம்) அவ்வாறாக இருப்பதில்லை. கனடாவும், இந்தியாவும் சமஷ்டி அரசியலமைப்புகளைக் கொண்டிருக்காவிட்டால் கூறுபட்டிருக்கக் கூடியன என்பதும், பங்களாதேஷ், எரித்திரியா, பொஸ்னியா முதலிய நாடுகள் தோன்றியிருக்க மாட்டாதென்பதும், அவைகள் உள்ளக சுயநிர்ணயத்தையோ, சமத்துவத்தையோ கொண்டிருந்தால் இவ்வாறு நடந்திருக்கமுடியாதென்றும் கருத இடமுண்டு. எவ்வாறாயினும். இது போன்ற வரலாற்றுச் சம்பவங்களினால் பிரிவினை பற்றியும், தமிழ் நாட்டுடனான அரசியல் தொடர்புகள் பற்றியும் சிங்களவர்கள் கொண்டிருக்கும் அச்சத்தைப் போக்கிவிட முடியாது. ஆனால் இவை எடுத்தாராயப்படவேண்டியுள்ளதுடன் அவசியமான பாதுகாப்பு முன் நடவடிக்கைகள் எடுக்கப்படவும் வேண்டும். மறுபுறம், பிரதேச அரசுகளைக் கலைப்பதற்கும், மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் உள்ள மத்திய அரசின் கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் பற்றி சிறுபான்மையினர் மத்தியிலுள்ள அச்சங்கள் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

1938ல் லெனாட் வுல்ஃப் என்பவர் அதிகளவு அதிகாரப்பரவலாக்கமோ அல்லது ஒரு சமஷ்டி முறையோ தேவையென வாதிட்டார். லெனாட் வுல்ஃப்பின் தீர்க்கதரிசனத்தைப் புறந்தள்ளிய இலங்கை, சமத்துவத்தினடிப்படையில் பல்லினச் சமுதாயமொன்றிற்கானதும், இனப் பல்வகைக்கானதும், அதிகாரத்தைப் பகிர்வதற்கானதுமான அரசியற் சட்ட அடிப்படைகளை வகுக்கத் தவறிவிட்டது. (திருச்செல்வம் 1997:33) எந்த அரசும் ஏற்புடையதொன்றாய் இருக்கவேண்டுமானால் மக்கள் தொகையின் பெரும் பிரிவினர் யாவரினது பார்வையிலும் சட்ட உரிமையுடையதாய் இருத்தல் வேண்டும். இம்மாதிரியான மக்கட் பிரிவு ஒவ்வொன்றிற்கும் அரசமைப்பதிலும் ஆட்சியமைப்பின் சகல மட்டத்திலும் பங்கு கொண்டிருப்பதாலேயே இது சாத்தியமாகின்றது. சிறுபான்மைச் சமூகங்கள் மத்திய அரசாங்கமொன்றின் உருவாக்கத்திலோ அல்லது ஆட்சியிலோ பெரும் பங்காற்றக்கூடிய நிலையிலிருப்பதென்பது சாத்தியமானதல்ல. மாகாண மட்டத்தில் கணிசமானளவு அதிகாரங்களைப் பகிர்கின்றமையானது இதுவரைகாலமும் அனுபவித்திராத தங்கள் பகுதி மட்டத்திலான சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமொன்றினை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்குவதாக அமையும்.

## பிரதேச மட்டத்திலான சுயநிர்ணய உரிமையை நோக்கிய பயணம்

இந்தியா பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குள் அடங்கியுள்ள பல பிரதேசங்களில் தொடர்ந்து கொண்டிருக்கும் இன, மத, மற்றும் சாதிப் பூசல்கள் அப்பகுதிகளைப் பெரும் அழிவுக்குள்ளாக்கி வந்துள்ளன. ஆனால் எமது நாட்டிலோ

1915இல் முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்கள் இடம்பெற்ற ஒரு சிறு காலப்பகுதியைத் தவிர, 1950கள் வரையிலும், அந்நாடுகளில் இடம்பெற்றதுபோன்ற உக்கிரமானவையும், பாரிய அளவிலானவையுமான கலவரங்கள் இடம் பெற்றதில்லை. 1956இலும் 1958இலும் இடம்பெற்ற தமிழருக் கெதிரான கலவரங்கள் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணின. 1977, 1979, 1981 முதலான ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்கள் 1983ஆம் ஆண்டின் இனப்படுகொலைக்கும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்திற்கும் காரணமாயமைந்தன.

கடந்த ஆறு தசாப்தக் காலப்பகுதிகளில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான உறவுகளின் ஒட்டுமொத்தப் போக்கு இடையிடையே சிறுசிறு மாற்றங்கள் இருந்தும் சீராக இருந்தாகக் கூறிவிடமுடியாது. ஐந்து தசாப்தகாலத்திற்கு முன்னர் ஒற்றையாட்சி முறையுடன் திருப்திப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்கள், திடீரெனப் பிரிந்து செல்லும் உரிமையுடனான வடக்கு கிழக்கு பிரதேசத்தினூடாக சுயாட்சி கோரத் தலைப்பட்டனர். மேலும் இரண்டு தசாப்த காலமாகத் தமிழர்கள் பிரிவினைக் கோரிக்கைக்குள்ள தங்களது எதிர்ப்பை இடைவிடாது வலிமையாகக் காட்டிவந்துள்ளனர். இருந்தும் எழுபதுகளில் பிரிந்துசெல்லும், உரிமைக்கான கோரிக்கை வலுவடையத் தொடங்கியது. கிட்டத்தட்ட இரண்டு தசாப்தகால உள்நாட்டுப் போருக்குப் பின்னர் உள்ளக சுயநிர்ணய உரிமையினடிப்படையிலான தேசிய தீர்வு ஏற்படக்கூடிய சூழல் தோன்றியுள்ளது. இம்மாதிரியான கோரிக்கை ஐந்து தசாப்தங்களுக்கு முன்பு இலங்கைத் தமிழர் தலைமையினால் முன்வைக்கப்பட்டு, சிங்களத் தலைமையின் சகல தரப்பினராலும் நிராகரிக்கப்பட்டும் இருந்தது.

கடந்த ஆறு தசாப்தங்களாக நடைபெற்ற மோதல்கள் காரணமாக மட்டுமே உள்ளக சுயநிர்ணய உரிமையினடிப்படையில் ஒரு தீர்வைக் காணவேண்டுமெனும் நிலை ஏற்பட்டதா அல்லது வேறு மாற்றுத் தீர்வேதுமில்லையென்பதால் உருவானதா என்ற கேள்வி எழுகிறது. உலகரீதியாக அரசியல் நிறுவனங்களிலும், ஆட்சிமுறையிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இனரீதியான நடவடிக்கைகளின் போக்குகளின் அதிகரிப்பையும், உலகம் பூராவும் மோதல்களின் மையமாகியிருப்பதையும் கொண்டு பார்க்கையில், உள்ளக சுயநிர்ணயத்திற்கு இடமளிக்காத எந்தவொரு ஆட்சிமுறையும் இலங்கைக்குச் சாத்தியமாகிவிடமுடியாதென்பது தெளிவாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து இன்னுமொரு பிரச்சினையும் எழுகின்றது. பிரதேசரீதியான சுயநிர்ணயத்திற்கும் பிரதேச ரீதியாயில்லாத சுயநிர்ணத்திற்கும் இடையே எதனைத் தெரிவதென்பதே அதுவாகும். அதாவது, (கனடாவிலும், இந்தியாவிலும் உள்ளதுபோன்று) மொழியின் அடிப்படையிலானதோ அல்லது (மலேஷியாவில் உள்ளதைப்போன்று) அரசியல் முறைமையிலும், ஆட்சியமைப்பிலும் பிரதேச அடிப்படையிலல்லாத ஏதோவொரு வகையிலான இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தைக் கொண்டதோ என்பதேயாகும்.

ஒரு பிரதேச அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணயமானது இன்னுமொரு வழியில் மதசார்பற்ற ஆட்சிமுறையை அமைதிக்கிறது என்பதை இங்கு நாம் அவதானித்தல் பொருத்தமாகும். நிர்வாக மொழி தவிர்ந்த ஏனைய விவகாரங்களில் சுயாட்சிப் பிரதேசத்தின் சட்டங்களும், அரசியலும் மற்றைய பிரதேசத்திலும் வேறுபட்டதாக இருக்கத் தேவையில்லை. அதுவுமன்றி, உரிமைகளையும், வாய்ப்புக்களையும் இனத்துவத்தின் அடிப்படையில் வரையறுக்க வேண்டியதுமில்லை. இம்மாதிரியானதோர் சூழ்நிலையில் இன உணர்வு படிப்படியாகக் குறைந்து போய்விடுவதுடன் தவிர்த்துக் கொள்ளமுடியாததுமாகிவிடும்.

மறுபுறம், சுயநிர்ணயமானது பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டிராதவிடத்து, இனத்துவத்தைச் சட்டங்களிலும், விதிகளிலும், நிறுவனங்களிலும், அரசியல் முறைமைகளிலும் தெளிவாகப் பிரதிபலித்துக் காட்டவேண்டியதாயிருக்கும். இது இன உணர்வை மறக்கவிடாது பேணவும் தூண்டும். மலேசியாவில் இந் நிலையே நிலவுகிறது. அங்குள்ள அரசியல் நிறுவன அமைப்பு இனத்துவ அடிப்படையில் உள்ளதுடன், ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இனங்களுக்கிடையேயான கூட்டணிகளாகும். பூமிபுத்திரக் கொள்கைகள், உரிமைகளும், வாய்ப்புகளும் இனரீதியாக வரையறை செய்யப்படவேண்டுமென்பதையே வலியுறுத்துகின்றன. இந்தியாவில், மொழி வழித்தேசியக் கோட்பாடானது மாநிலங்களை மொழிவழியில் மீளமைப்புச் செய்தமையால் பெருமளவுக்கு அகன்றுவிடுகின்ற அதேவேளை, சாதி மற்றும் குல உணர்வுகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படுகின்றன. இதனைக் குறிப்பிட்ட சாதியொன்றிற்கும், குலம் ஒன்றிற்கும் மத்திய ஆட்சியிலும், மாநில ஆட்சியிலும் பிரதிநிதித்துவம் வழங்குவதன் மூலமும், அரசாங்க சேவை மற்றும் கல்வி நிறுவனங்களிலான நியமனங்களைச் சிறப்பு ஒழுங்குகள்மூலம் வழங்குவதாலும் நிறைவேற்றுகின்றனர். இந்தியாவின் பாரிய மொழி வழி மக்கட்குழுக்கள் தம்மைத்தாமே ஆளும் அளவுக்கு விசாலமான பிரதேசங்களில் செறிந்திருப்பதால் மொழிவழி தேசிய கோட்பாட்டிலுள்ள பற்றுதலை குறைவடையச் செய்கிறது. இதற்கு மாறாக தலித் இனத்தவர் (தீண்டப்படாதவர்) மற்றும் இனக்குழுக்கள் சுயாட்சி அலகு ஒன்றினை அமைவதற்குப் போதாத அளவுக்குச் சிறிய பகுதிகளில் சிதறி வாழ்வதன் காரணமாக அவர்களுக்கு சாதி மற்றும் இனக்குழுக்களுக்குரிய ஒதுக்கீடுகளையே வழங்கும் அவசியமும் உருவாகியுள்ளது. இவர்கள் விடயத்தில் சட்டமன்றங்கள், அரசசேவை, கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்வதற்கான மத அடிப்படையிலான ஏற்பாடுகளிலும் பார்க்க இதுவே சாத்தியமானதாகும்.

இம்மாதிரியான நிலைமைகளைக் கருத்திலெடுத்தால், வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் (தமிழர்களும் முஸ்லிம்களும்) செறிந்து வாழ்வதானது, மதச்சார்பற்ற அதிகாரப் பகிர்வினூடாக உள்ளக சுயநிர்ணயம் பிரதேச மட்டத்தில் உருவாகக்கூடிய சாத்தியத்தை வழங்குகிறது. இதற்கு மாற்றீடாக, மலேசியாவிலுள்ளதைப் போன்ற

இன உணர்வைப் பெருமளவிற் பேணிக்காக்கும் வகையிலான விசேட இனத்துவ ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டியிருக்கும். சுயாட்சிப் பிரதேசங்கள் ஓரே இனத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என இங்கு உணர்த்த முற்படவில்லை. அவ்வாறிருப்பது பயங்கர ஆபத்தை விளைவிப்பதாயுமிருக்கும். கடந்தகால இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் நடைபெறலாகாது. சுயாட்சிப் பிரதேசங்கள் (வடக்கு கிழக்கு உட்பட) யாவும் பல்லினத்தன்மையவையாயிருத்தல் விரும்பத்தக்கதாயிருக்கும்.

நாட்டிற்குட்பட்ட பிரதேச அடிப்படையிலான சுயநிர்ணயம் விரும்பத்தக்கதும் தவிர்க்கமுடியாததுமாயின், சுதந்திரம் வழங்கப்பட்ட வேளையிலோ அதற்கும் முன்னரோ அது நிறுவப்பட்டிராதது ஏன்? தீர்க்கதரிசனமின்மையேயன்றி வேறெதுவுமில்லை.எமது அரசியற் கலாச்சாரத்தின் துர்ப்பாக்கியமாக விளங்கும். அத்துடன் இனங்களுக்கிடையேயான கலந்துரையாடல்கள் இல்லாமையும் இன்னுமொரு காரணமாகும். இருபதுகளிலும் முப்பதுகளிலும் கண்டிச் சிங்களவர்கள் பிரதேச அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தினர். அக்கோரிக்கை கண்டியின் பிரிவினையை வலியுறுத்தியதால் இலங்கைத் தமிழ் தலைமையுட்பட்ட ஏனைய இனத்தலைமைகள் அதனை எதிர்த்தன. 1950, 60களில் இலங்கைத் தமிழர்களும் பிரதேச அடிப்படையிலான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்னெடுக்கத் தலைப்பட்டதால் அதற்கும் முக்கியமாக சிங்களவரிடமிருந்து எதிர்ப்புக் கிடைத்தது. மார்க்சிய சித்தாந்தங்களுடன் இணங்கிப்போன கம்யூனிஸ்ட் கட்சியும் ஐம்பதுகளில் பிரதேச சுயாட்சிமுறையை முன்வைத்தது. ஆயினும் இலங்கைத் தமிழ் சமஷ்டிவாதிகளுடன் பொதுவான குறிக்கோள் ஒன்றிற்கு அவர்களால் வரமுடியவில்லை. இந்நிலையில், ஒற்றையாட்சிமுறைக்குப் பதிலாக மதச்சார்பற்ற மாற்றாக சமஷ்டியை முன் வைப்பதற்கிருந்த பல்லினக்கூட்டுக்கான வாய்ப்பு தவறவிடப்பட்டது. இதன் காரணமாக, இலங்கையை கூறுபடாமல் வைத்திருப்பதற்கான அரசியல் ஏற்பாட்டின் முக்கிய பகுதியாகிய பிரதேச சுயாட்சியை ஏற்றுக்கொள்வதற்கு, ஐந்து தசாப்த அரசியல் மோதல்களையும் இரண்டு தசாப்தகால உள்நாட்டு யுத்தநிலைமையும் கருத்துமோதல்களடங்கிய காலப்பகுதியொன்றையும் தாண்டவேண்டியிருந்தது. 2002இல் ஆண்டில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. பேச்சுக்கள் தொடர்கின்றன. ஆனால் சமாதானம்தான் இன்னும் எட்டப்படவில்லை. இனிவரும் தசாப்தங்களில் ஏற்படக்கூடிய மோதல்களைச் சமாளிப்பதற்கு ஏதுவான உரையாடல்களும் ஒத்துழைப்பும் சகல மட்டங்களிலும் இனங்களுக்கிடையே கிரமமாக இடம்பெறல் அவசியமாகும்

அனைவருக்கும் மனித உரிமைகள்

இலங்கையின் இனமோதல் சிங்களப் பெரும்பான்மையோருக்கும் சிறுபான்மையிருக்கும், குறிப்பாகத் தமிழர்களுக்குமிடையே இருப்பதுபோலவே தோற்றும். மொழியடிப்படையிலான

பகைமை சிங்களப் பெரும்பான்மையினருக்கும், தமிழ் பேசும் சிறுபான்மையருக்குமிடையே காணப்படுகிறது. ஆனால் நிலைமையோ இதைவிடச் சிக்கல் மிக்கது. சிங்களம் பேசும் சிங்கள இனத்திற்கும் தமிழ்பேசும் தமிழ் இனத்திற்குமிடையே மத வேறுபாடுகள் உள்ளன. இவை யாவற்றுக்கும் மேலாக வர்க்கக் காரணிகளும் உள்ளன. இனம், மொழி, மதம், சாதி அடிப்படையில் குழுக்கள் வேறுபடுகின்ற அதே வேளை இக்குழுக்களுக்கிடையே இறுக்கமான பிணைப்புக்களும் ஆழ வேரூன்றி உள்ளன. யாவற்றிற்கும் மேலாக, இந்த ஒட்டுமொத்த நிலையைக் கிரமமான ஒரு முறையில் மாகாண, மாவட்ட, பிரிவுகள், நகரங்கள், கிராமங்கள் என்று பிரித்துப் பார்ப்போமாயின் அல்லது எமது கவனத்தைக்கிடையாக மாகாணத்திலிருந்து மாகாணத்திற்கும், மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கும் பிரிவிலிருந்து பிரிவுக்கும், நகரத்திலிருந்து நகரத்திற்கும், கிராமத்திலிருந்து கிராமத்திற்கும் நகர்த்திப் பார்ப்போமாயின் நமது மொழி, மத, கலாசாரப் பாரம்பரியங்களின் வெவ்வேறு வகை வளத்தைக் காணமுடிகின்றது.

வடக்கு கிழக்கின் பெரும்பாலான பகுதியிலும் பிற சில இடங்களிலும் சிங்களவர்களும் பௌத்தர்களும் சிறுபான்மையினராக உள்ளனர். ஏனைய மாகாணங்களில் அவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். ஆனால் இம்மாகாணங்களிலும் சிற்சில வட்டாரங்களில் இவர்கள் சிறு எண்ணிக்கையினராகவுள்ளனர். இதுபோன்று வடக்கு கிழக்கிலும் சிங்களவர்களும், பௌத்தர்களும் பெரும்பான்மையராகவுள்ள பல வட்டாரங்கள் உள்ளன. இதேபோன்ற தமிழர், மற்றும் முஸ்லிம் கிராமங்களும் உள்ளன. பெரிய இனக் குழுக்கள் ஒவ்வொன்றும் பல இடங்களில் பெரும்பான்மையராகவும், வேறு சில இடங்களில் சிறுபான்மையினராகவும் உள்ளனர். மோதல் தவிர்க்கப்படவோ, கட்டுப்படுத்தப்படவோ முடியுமாயின் இந்த நிலைமையானது, இனங்களுக்கிடையேயான நல் உறவுகள், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு என்பனவற்றை உருவாக்குவதற்கு வாய்ப்பானதாகும். இத்தீவின் ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு இனத்தவர் பாதிக்கப்படக்கூடிய சிறுபான்மையராக இருக்கிறார்கள் என்ற விழிப்புணர்ச்சி அந்த இனத்தவர் பெரும்பான்மையாக ஆதிக்கத்திலிருக்கும் பகுதிகளில் ஆதிக்க உணர்விலான துணிவிற்குக் காரணமாகிவிடுகின்றது. அதே வேளை, ஒரு பகுதியில் இனங்களுக்கிடையே மோதல் நிலை ஏற்படுமாயின் இன்னுமொரு பகுதியில் பழிக்குப் பழிவாங்கலுக்குத் தூண்டி விடுகின்றது.

சிறுபான்மையினரின் அனுபவங்கள் இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபடும். சிறுபான்மையினங்களுக்குள்ள அச்சங்கள், அவர்கள் எதிர்நோக்கும் பாரபட்சங்கள், பாரபட்சங்கள் இல்லாவிடினும் அவர்கள் எதிர்கொள்ளநேரும் இனஞ்சார் ஓரங்கட்டுகை, மற்றும் பாரபட்சமொன்றோ இனஞ்சார் ஓரங்கட்டுகையொன்றோ வெளிப்படையாகத் தோற்றாத பிரதிகூல நடவடிக்கைகள் போன்றவற்றில் சிலவற்றைப் பட்டியலிட்டுக்காட்டுதல் பயனுள்ளதாயிருக்கும்.

உடல்ரீதியான பாதுகாப்பின்மையும் அவமதிப்பிற்குள்ளாதலும்.

சஞ்சலத்தை உண்டுபண்ணும் காரணியாக உடல்ரீதியான பாதுகாப்பின்மையைக் குறிப்பிடலாம். 1915இல் முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்களுக்குப் பிந்திய நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை நாடு முழுவதையும் சம்பந்தப்படுத்தக்கூடிய வன்முறை நிகழ்வுகள் எதுமற்ற நிலை நிலவியது. 1956இல் இந்த வரலாறு சிதறடிக்கப்பட்டமை எமது துர்ப்பாக்கியமே. காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகமிருந்த தமிழர்கள் மீதான தாக்குதலுடன் ஆரம்பமாகி பின்னர் பல இடங்களில் பெருமளவில் 1958இல் இடம் பெற்றிருந்தது. சுமார் இரு தசாப்தகாலம் அடங்கியிருந்து 1977இல் மீண்டும் இனவன்முறைகள் வெடித்தன. 1983இல் இனப்படுகொலையுடன் உச்சநிலையை அடைந்த இது இற்றைவரை தொடர்ந்து கொண்டே உள்ளது. பல சந்தர்ப்பங்களில் (1983ல் தமிழருக்கெதிராகச் செயற்படுத்தப்பட்ட இனப் படுகொலையை ஒரு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.) இனவன்முறை இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையுடன் பிணைந்திருந்தது. இவற்றில் சில (யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை போன்ற) இனச் சுத்திகரிப்புகள் வன்முறை ஊட்டலைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. ஆயுதப்படைகள், சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் முதலானோர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் விசேடமாகக் கிழக்கு மாகாணத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் ஆயிரக்கணக்கான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் பலியானார்கள். 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த வன்செயல்களின் தாக்கம் குறைந்துள்ளது. ஆனாலும் கிழக்கு மாகாணம் போன்ற இடங்களில் பதற்றம் அதிகரித்துள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் வன்முறையாகவும் வெடித்துள்ளது.

கொழும்பிலும் மற்றுமிடங்களிலும் வாழும் தமிழர்கள் தமது வதிவிட விபரங்களைப் பொலிசில் பதியவேண்டுமென்ற இனப்பாகுபாடானதும், அவமதிப்பு நிறைந்ததுமான சட்ட வேண்டுதல் தமிழர்கள் மத்தியில் பெரும் சினத்தை உண்டுபண்ணியதுடன் அவர்களிடையே பாதுகாப்பற்ற உணர்வினையும் உருவாக்கியுள்ளது. வழமையான வாழ்விடம் தவிர்ந்த இடத்தில் ஒரு இரவு தற்காலிகமாத் தங்குவதற்குக் கூட பொலிசில் பதியப்பட வேண்டியிருந்தமை பெருஞ்சினத்தை உண்டு பண்ணியது. இப் பதிவுமுறை, பாதுகாப்பைக் காரணம் காட்டி தேடுதல் நடத்தும் சாட்டில் பொலிசார் தமிழரது வீடுகளுக்கு விஜயம் செய்வதற்கும், வீதித்தடைகளில் துன்புறுத்துவதற்கும் வேண்டிய தகவல்களைப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கியது. இவ்வித நடத்தைகள் வடக்குக்கிழக்கிற்கு வெளியே நிறுத்தப்பட்டுவிட்டமை மகிழ்ச்சிக்குரியதாயினும் வடக்கு கிழக்கில் பல இடங்களில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அடக்குமுறைபற்றி முறையிடுகின்றனர். ஒரு பகுதியினர் தாம் பாதுகாப்புப் படையினராலோ அல்லது துணைப்படையினராலோ இம்சைக்கு உள்ளாக்கப்படுவதாகவும்,மற்றப் பகுதியினர் தாம் விடுதலைப் புலிகளினாலோ ஏனைய

குழுக்களாலோ துன்புறுத்தப்படுவதாகவும் முறைப்படுகின்றனர். உடல் ரீதியான பாதுகாப்பின்மை மற்றும் சோதனைச்சாவடிகளில் துன்புறுத்தல் தொடர்பான அச்சங்கள் ஒரு புறமிருக்க, பல வட்டாரங்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. இனரீதியாகப் பிரித்து வைக்கப்படுவது சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் உகந்தது எனக் கோரப்பட்டாலும், இதனால் பாரபட்சமே பெருகுகின்றது. அத்துடன் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பெரும்பாலும் பகைமைக்கும், வன்மத்திற்கும் இட்டுச்செல்கின்றன. இனங்களைப் பிரித்து வைப்பதால் நீடித்து நிலைக்கக்கூடியதான சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமான தளமொன்றை ஒருபோதும் உருவாக்கமுடியாது.

## மொழிரீதியான பாகுபாடும் ஓரங்கட்டலும்

மிகப்பாரியதும், நீண்டகாலமாக இருந்துவருவதும், இதுவரை தீர்க்கப்படாமல் இருப்பதுமான அரச கரும மொழி(கள்) தொடர்பான நெருக்கடியொன்று 1950களில் தோற்றமெடுத்தது. மலையகத் தமிழர்கள் தமது குடியுரிமை, வாக்குரிமை ஆகியவற்றை இழந்ததனால் ஏற்பட்ட அரசியற் சமநிலையின் சரிவின் விளைவாக இதனைக் குறிப்பிடலாம். தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக ஏற்றுக்கொண்டதால் இந்த நெருக்கடி சட்டரீதியாகச் சமாளிக்கப்பட்டுவிட்டதாயினும், சில விவகாரங்கள் முன் எப்போதையும் விட மிக மோசமடைந்துள்ளன. தமிழ் பேசும் மக்கள் அரச சேவைக்குள் ஆட்சேர்க்கப்படுவது கடந்த தசாப்தங்களில் அருகிவந்துள்ளது. ஆட்சேர்க்கப்பட்டவர்களுள் 5 சதவீதத்தினரே சிறுபான்மையினர். இவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணியமர்த்தப்படுகின்றனர். இதன் விளைவாக, வடக்கு கிழக்கிற்கு வெளியே தமிழ் பேசும் மக்களுக்குச் சேவை செய்யும் ஆற்றல் அரச அலுவலகங்களுக்கு இல்லை. இதே போன்றே, வடக்கு கிழக்கில் பணியமர்த்தப்படும் சிங்களவரின் விகிதாசாரமும் குறைவடைந்துள்ளது.

அரசாங்க அலுவலகமொன்றிற்கோ அல்லது இலங்கையின் எப்பாகத்திலேனுமுள்ள ஒரு பஸ் டிப்போவுக்கோ சென்றால் இப்பிரச்சினையின் தாற்பரியம் புரியும். அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் நாட்டின் சட்டங்களுக்கும் முரணாக, பல இனங்களும் வாழும் பெரும்பாலான இடங்களில் அநேகமான அரசாங்க அலுவலகங்கள் ஒரு மொழியிலேயே இயங்குகின்றன. மூன்று மொழிகளிலுமியங்கும் அலுவலகங்கள் ஒரு சிலவேயாகும். அங்கு ஆதிக்கத்திலுள்ள மொழி பேசாதவர்களுக்கு இந்த அலுவலகங்களின் சேவை கிட்டுவதில்லை பெயர்ப் பலகைகள்கூட மூன்று மொழிகளிலுமிருப்பதில்லை அரசகரும மொழிகளுள் ஏதேனுமொன்றைக் காணமுடியாதிருக்கும். மொத்தத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களம் பேசுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கொழும்பிலும் ஏனைய மாகாணங்களிலும், மற்றும் பிரதான நகரங்களிலும், தமிழ்பேசும் மக்கள் செறிந்துவாழும் மாவட்டங்களிலும் தமிழ்பேசும் மக்கள் பிரதிகூல நிலையிலுள்ளனர்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென அரைமனத்துடன் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளுள் ஒரு சிறு எண்ணிக்கை மொழிபெயர்ப்பாளர்களும், மொழிப்பயிற்சி பெறுவதற்கு ஒரு கணிசமானளவு ஊக்குவிப்பும் வழங்கப்பட்டிருந்தாலும் அது போதுமானதாக இல்லை. ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்காவது இப்பிரச்சினையைத் தணிப்பதற்கான ஆட்சேர்ப்புப் பணிகளிலோ அல்லது ஏற்றவர்களை உரிய இடத்திற்கு நியமிப்பதோ, மிகவும் அவசர தேவையாகவுள்ளது. உரிய மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பாடசாலைகளுக்கான சேவையினுள் ஆட்களைச் சேர்ப்பது தொடர்பாகவும் நிரந்தரமாக செயற்படுத்தத்தக்க மேலதிக சீர்திருத்த, நடவடிக்கைகள் அவசியம். அரசாங்க சேவையினுள் பிரவேசிப்பதற்கு முன்னதாக, பாடசாலை மட்டத்திலேயே மும்மொழித்திறனை உருவாக்குவதற்குரிய வசதிகளும், ஊக்குவிப்புகளும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். இன்றைய உடனடித் தேவைகளை நிறைவேற்றும் வரையிலாவது, குறைந்தபட்ச சிங்கள, தமிழ் மொழித்திறன்களையுடையவர்களை நாட்டின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள, சகல அலுவலகங்களுக்கும் நியமிக்கும் ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வது அவசியமாகும். அத்துடன், பொதுமக்கள் அரச அலுவலகங்களுடன் தமக்குள்ள விவகாரங்களைத் தமது சொந்த மொழியிலேயே, பல்மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலேனும் நிறைவேற்றுவதற்கு வசதியாக, முழுமையான வசதிகளைப் படிப்படியாகவேனும் அறிமுகமாக்கக் கட்டங்கட்டமாக அமுலாக்கும் செயற்றிட்டம் ஒன்று அவசியம்.

## பல்லினத்தன்மை

மூன்று பெரிய இனங்களுள் ஏதாவது இரண்டேனும் இலங்கையின் எல்லாப் பகுதியிலும் இருப்பதே நீண்டகால அடிப்படையில் விரும்பத்தக்கதாகும். அத்தகையதொரு நிலை 50களின் நடுப்பகுதிவரை நிலவியது. அன்றிலிருந்து, 1958 ஆம் ஆண்டின் இனச்சுத்திகரிப்பு தொடக்கம் இனங்கள் கலந்துவாழும் வதிவிடத்தொகுதிகளோ, கல்வி நிறுவனங்களோ நாட்டின் அனேகமான பகுதிகளில் அற்றுப்போயின. 1983ஆம் ஆண்டின் இனப்படுகொலை பாரிய மாற்றமொன்றினைத் தோற்றுவித்தது. ஆயினும், நாட்டின் பல பாகங்களிலும், குறிப்பாக கிழக்கிலும் பெரும் எண்ணிக்கையான சம்பவங்கள் நடைபெற்றன. இவையாவுமே இனச்சுத்திகரிப்புக்கு வழிசமைத்தன. இந்நிலையில் மாற்றம் ஏற்படுவது அவசியமாகும்.

இனரீதியான பாரபட்சம் இலங்கையில் குறைவென்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். ஆனால் நாடு முழுவதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதியடிப்படையிலான பாரபட்சம் மலிந்துள்ளமை எமது துர்அதிஷ்டம். பாரபட்சத்திற்கும் மேலாக இனஞ்சார் பாகுபாடுகளும் உள்ளன. உதாரணமாக, பாரபட்ச உணர்வில்லாத தொழில் கொள்பவர்கூட,

பல்வேறு காரணங்களுக்காக, சுயமாகவோ அல்லது தன்னையும் அறியாமலோ குறித்த ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களையே பணியாளர்களாகத் தேர்ந்தெடுப்பதையும், ஒரு மொழியையே அலுவலக மொழியாகக் கடைப்பிடிப்பதையும் வசதியானதாகக் கருதுவார். இதன் விளைவாக சிறுபான்மையினர் பல பிரதிகூலங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதும் பெரும்பான்மை இனத்தவர்களுக்குத் தெரியவருவதுமில்லை. அதுபோலவே, சிறுபான்மையினர் தாம் எதிர்கொள்ளும் பிரதிகூலங்கள் பற்றி மிகவும் ஆழமாகப் புரிந்து வைத்துள்ளதுடன் தாம் அன்னியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் உணர்ந்துள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள, வெவ்வேறு இனங்கள் இந்தப் பிரச்சினையின் இயல்பையும், அளவையும் பற்றி வெவ்வேறு கருத்துக் கொண்டவர்களாக இருப்பர்.

வலயப் படுத்துகை

போரின் துரதிஷ்டவசமான பல பின்விளைவுகளில் ஒன்றாக இத்தீவு அரச கட்டுப்பாட்டுப் பகுதி என்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்றும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் சில பகுதிகள் எல்லைப் பகுதிகளாக கணிக்கப்பட்டும் எவரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளனவென்பது உறுதிசெய்யப்படா நிலையிலும் உள்ளன. பாதுகாப்பைப் பேணுதல், பொலிஸ் கடமைகள், சட்டம் ஒழுங்கு, நீதிமுறைபோன்ற, சில இவற்றை நிர்வகிக்கும் நிறுவனங்களும், அவை தொடர்பான விதிகளும், பிரமாணங்களும் தனித்துவமானவையாகவும் ஒன்றுடன் ஒன்று இணைத்துச் செயற்படுத்த முடியாதனவாகவும் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டும் உள்ளன. இந்நிலை குடிமக்கள்மீது முரண்பாடு நிலையையும் தடுமாற்றத்தையும் நிச்சயமற்ற நிலையையும் ஏனையவகை இயலாமையையும் வலிந்து திணிப்பனவாகவுள்ளன. 2002 டிசம்பர் 5ம் திகதி நடாத்தப்பெற்ற செய்தியாளர் மகாநாட்டில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இப்பிரச்சினைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஓரளவு தென்பூட்டுவதாகவுள்ளது. ஒஸ்லோவில் அவர். .......... இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்றை நாம் காணும்போது எமது காவல்துறை நிலையங்கள் பிராந்தியப் பொலிஸ் படையினுள் வாங்கப்பட்டு, பேச்சுவார்த்தை மூலமான தீர்வுடன் அமுலுக்கு வரமுடியும் எனத் தெரிவித்தார். இந்தக் கோட்பாட்டின்படியே தமிழீழ நீதிமன்றங்களும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்படும் வேறும் ஏதேனும் நிறுவனங்களும் அவற்றிற்குரிய பிரிவுகளுடன் சங்கமமாகிவிடுமெனக் கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், மோதல் இடம்பெறும் பகுதிகளிலும் வாழும் மக்கள், பாதுகாப்பு தொடர்பான பல்வேறு குறைபாடுகளுடன், அடிப்படைத் தேவைகளான தொழில்வாய்ப்பு, உடல்நலம் பேணல், பாடசாலை வசதிகள், குடியிருப்பு, பொது வசதிகள் முதலானவையற்ற நிலையிலேயே உள்ளனர்.

இயல்பான சிவில் நடைமுறைகள், மின்சார வசதி, நீர்வழங்கல், வீதி வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை மீண்டும் ஏற்படுத்துவதற்கு முன்னுரிமையளித்தல் அவசியமாகும். மீளக்குடியமர்வு தொடர்பான இரண்டும் கெட்டான் நிலை முன்னுரிமை அடிப்படையிலானதென்றாலும் மிகவும் அவசியமானவையான பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு தேவைகளுடன், அதே மாதிரியான தகுதியுடைய இடம்பெயர்ந்தவர்களது மீள் குடியேற்றக் கோரிக்கைகளுக்கும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மீளக்குடியமர்ந்துவிட்டவர்களுக்குமிடையே உருவாகும் பதற்ற நிலைக்குமிடையேயான பிணக்குகளை முன்னுரிமை அடிப்படையில் முடிவு செய்து நிறைவேற்ற வேண்டியும் உள்ளது. குழுக்கள் இனம், சாதி, மதம், மொழி, பிரதேச தொடர்புகள், சமூக அந்தஸ்து முதலானவற்றினடிப்படையில் போட்டியிடும்போது பிரச்சினைகள் மேலும் மோசமாகி விடுகின்றன. இத்தகைய பிரச்சினைகள் மனிதாபிமான, புனர்வாழ்வு தொடர்பான நடவடிக்கைகளுக்கான செயற்குழுவின் அதிகாரத்தின்கீழ் வருவனவாகும். ஆனால் சில சிக்கல்களை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

ஒரு இனத்தைச் சேர்ந்த இரு குழுக்களாயிருப்பினும் கூட நிலம், நீர், குடியிருப்பு, பாடசாலை வசதி, சுகாதார சேவைகள், தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் ஆகியவற்றிற்கான போட்டிகளில் பதற்றநிலை உருவாக இடமுண்டு. குறிப்பாக இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமருமிடத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாதவிடத்து பதற்றம் அதிகமாகிவிடும். (வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் மத்தியில் வாழும் போது இம்மாதிரியானதொரு நிலை ஏற்படுவதை உதாரணமாகக் கொள்ளலாம்)

இதைவிடச் சிக்கலான பிரச்சினை, இடம்பெயர்ந்தவர்கள் இறுதியாக தமது வீட்டிற்கோ, காணிக்கோ திரும்பும்போது, அங்கு வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் இருப்பதையும், அதுமட்டுமன்றி அவர்களால் அங்கிருந்து வெளியேற முடியாமலோ, அல்லது வெளியேற விரும்பாமலோ இருப்பதுமாகும். குடியேறியிருந்தவர் ஏதேனும் ஒரு வகையில் அந்த சொத்தை திருத்தியமைத்திருப்பவராயின் பிரச்சினை மேலும் இறுக்கமாகிவிடும். அவர் ஒரு கணிசமான காலப்பகுதிக்கு அங்கு வாழ்ந்திருந்தவராயின் சில உரிமைகளைக் கோரிப் பெறமுற்படுவார்.

இவற்றிற்கும் மேலாக அரசியற் பிரச்சினைகளுக்கும் இடமுண்டு. இடம் பெயர்ந்தவர்கள் வீடு திரும்பும்போது அவர்களின் வீடுகளில் படையினர் குடியிருப்பதையும் அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதையும் காண நேரிடும். சில வேளை அது இனச்சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்ட பகுதியாகவிருக்கவும் கூடும். வடக்கிலிருந்து முஸ்லிம்களும், ஏனைய பல பகுதிகளிலிருந்து சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்களும் இவ்விதம் வெளியேற்றப்பட்டிருந்தமைக்கான வரலாறும் உண்டு.

### பெண்களும் சிறுவர்களும்

சமாதான செயற்பாடுகளில் ஆண், பெண் விவகாரங்களையும் உள்வாங்கிக்கொள்ளும் வகையில் மகளிர் குழுவொன்றை அமைத்துக்கொள்வதென உடன்பாடு காணப்பட்டதாக மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின் முடிவில் 2002 டிசம்பர் 5ஆம் திகதி நோர்வே அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை வரவேற்கக்கூடியதாகும். அத்துடன், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமையளிப்பதென்றும், தத்தமது குடும்பங்களுக்கோ அல்லது பாதுகாவலர்களுக்கோ உரிய சிறுவர்கள் குடிசார் அல்லது இராணுவ வேலை நிலையமொன்றில் இல்லாத நிலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் வரவேற்புக்குரியதாகும். பெண்கள் சிறுவர்கள் பற்றிய கரிசனைக்குரிய விவகாரங்கள் பிறிதொரு வெளியீட்டில் அடங்கவிருப்பதனால் இங்கு விபரமாக எடுத்துச் சொல்லப்படவில்லை.

### மனிதவுரிமைகளும், சிறுபான்மையினரும், சமாதான முறைவழியும்

சிறுபான்மையினர் இன அடிப்படையிலானவர்கள் மட்டுமல்ல. பல்வேறு அரசியற் கருத்துக்களை ஆதரிக்கும் அரசியற்கட்சிகளையும் இவற்றினுள் அடக்கலாம். சகல சிறுபான்மை உரிமைகளும் முக்கியமானவையே. தீவின் அனைத்துப் பகுதிகளின் ஜனநாயக உரிமைகளும், சுதந்திரங்களும் மீள ஏற்படுத்தப்படும்வரை இயல்புநிலை காணமுடியாது. மேலும், மலையகத் தமிழர்களை விசேடமாகப் பாதிக்கும் குடியுரிமையில்லாதவர்களெனும் நிலை அப்பட்டமான மனிதவுரிமை மீறலாகும். இந்நிலை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

மனிதவுரிமைகளைப் பங்கு போடமுடியாததுமல்லாது சமாதானம், ஜனநாயக உரிமைகள், சுதந்திரம் என்பவற்றிலிருந்து வேறுபடுத்திப்பார்க்கவும் முடியாது. ஏதேனும் ஒரு பிரிவினருக்கு இவை மறுக்கப்படுமாயின், சகலருமே பாதிக்கப்படுவர். மேலும் சமாதானம் நிலவும் சூழ்நிலையிலேயே மனிதவுரிமைகளை மேம்படுத்தமுடியும். வடக்கு கிழக்கில் வசிக்கும் அல்லது அங்கு சென்றுவரும் எவராலும் அங்கு பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமையை காணாமலிருக்க முடியாது. தீவின் சகல பகுதிகளிலுமிருந்தும் ஏராளமான சிங்கள மக்கள் முதற் தடவையாக அங்கு சென்றுவருகிறார்கள். இடம்பெயர்ந்த முஸ்லிம்களும், தமிழர்களும் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் தம்மால் கைவிடப்பட்ட வீடுகள், கோவில்கள், பள்ளிவாசல்கள், சொத்துக்கள் முதலானவற்றைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்று திரும்புகின்றனர். பெருமளவினர் அங்கு மீளக்குடியமர்ந்தும் உள்ளனர். தமது தொழில்கள், பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்தும் வருகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் பலரும் இவை பற்றி சிந்திக்கிறார்கள். சோதனைச் சாவடிகள் குறைந்துவிட்டன. தொடர்ந்தும் பேணப்படும் சாவடிகளில்

பதற்றநிலை குறைந்து காணப்படுகிறது. உள்நூர் மக்கள் பல வருடங்களாக அனுபவித்த கெடுபிடிகளின்றிச் சுதந்திரமாக சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்கின்றனர். படைத்தரப்பினரும், புலிகளும் சுதந்திரமாக உலாவுவதைக் காணலாம். பெரும்பாலானோர் ஆயுதமின்றியே திரிகின்றனர். 2001ஆம் ஆண்டின் இறுதிவரை நிலவிய நிலைமைகளுடன் ஒப்பிடும்போது இதனைப் பாரிய மாற்றமாகக் கொள்ளலாம். பதற்றம் தொடர்ந்து நிலைத்திருக்கும் அல்லது தீவிரமடைந்துள்ள துறைகள் இப்போதுமுள்ளன. பிரச்சினைகள் சில மோசமடைந்தும் உள்ளன. சில பிரச்சினைகள் இன்னும் உள்ளனவென்பதுடன் பல வருடங்களுக்கு இழுபட இடமுண்டு. எனினும் கூட்டுமொத்தப் பலன் சாதகமான வளர்ச்சியென்றே குறிப்பிட வேண்டும். மோதல் தவிர்க்கப்பட வேண்டும். சமாதான முறைவழி முன்னெடுக்கப்பட வேண்டும். சனநாயக உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளிட்ட மனிதவுரிமைகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

கலாநிதி தேவநேசன் நேசையா

ISBN : 955 - 582 - 116 - X

Printed By: Unie Arts (Pvt) Ltd.